வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P . 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu




Email : news@eelanadu.lk | மலர் : 03 | 21.04.2022 வியாழக்கிழமை | இதழ் : 136 | பக்கங்கள் : 16

# நெருக்கடி நிலைமைக்கு ஜனாதிபதியே காரணம்!

## சுமந்திரனிடம் மனம்திறந்தார் மஹிந்த


கோப்புப்படம்

கொழும்பு, ஏப்ரல் 21

நாட்டின் இன்றைய நெருக்கடி நிலைமைகளுக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவே காரணம் என்று பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ சுமந்திரன் எம். பியிடம் தெரிவித்துள்ளார்.

அத்துடன், நிறைவேற்று அதிகாரத்தை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ இதன்போது உறுதியளித்தார்.

நேற்றைய தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஊடகப் பேச்சாளரும், யாழ்.மாவட்ட

15

# வன்முறை, போராட்டங்களால் அதிர்கின்றது தென்னிலங்கை!

கொழும்பு, ஏப்ரல் 21

பொருட்கள் விலையேற்றத்தைத் தொடர்ந்து நேற்று முன்தினம் அதிகாலை முதல் போராட்டங்கள் தொடங்கியிருந்தன. நேற்று இரண்டாவது நாளாகவும் நாட்டின் 12 மாவட்டங்களில் 18 பெரும் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. தவிர பல்வேறு சிறு போராட்டங்களும் நேற்று நாடளாவிய ரீதியில் இடம்பெற்றிருந்தன. போராட்டங்களால் கேகாலை - ரம்புக்கனையில்

15

## காலிமுகத்திடலில் புத்த பிக்கு சாகும் வரை உண்ணாவிரதம்!

கொழும்பு, ஏப். 21

அரசாங்கத்தக்கு எதிர்ப்பு தெரிவித்து காலிமுகத்திடலில் பௌத்த மதகுரு ஒருவர் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தார்.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி

15

## மேலும் மூவரின் ஆதரவை இழந்தது கோட்டாபய அரசு

கொழும்பு, ஏப். 21

அரச தரப்புக்கு ஆதரவாக இருந்த பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எஸ்.எம். தௌபீக் மற்றும் இஷாக் ரஹ்மான் ஆகியோர் அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்குவதிலிருந்து நேற்று முதல் விலகியுள்ளனர்.

இதனை பாரா

15

## எரிபொருள் விநியோகத்துக்கு விமானப்படையின் பாதுகாப்பு

கொழும்பு, ஏப். 21

எரிபொருள் விநியோகத்துக்கு பாதுகாப்பு வழங்குவதற்காக விமானப் படையினர் மற்றும் இராணுவத்தினர் களமிறக்கப்பட்டுள்ளனர்.

தேவை ஏற்படின் எரிபொருள் ரயில்களுக்கு இலங்கை விமானப்படை பாதுகாப்பு வழங்கும் என அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

அத்துடன் எரிபொருள் பவுஸர்களுக்கு இராணுவத்தினர் பாதுகாப்பு வழங்குவார்கள் எனவும் அவர் கூறினார்.

15

## ரம்புக்கனை சம்பவம் குறித்து ஜனாதிபதி கோட்டா கவலை

கொழும்பு, ஏப். 21

அமைதியான முறையில் போராட்டம் நடத்தும் இலங்கைப் பிரஜைகளின் உரிமைக்கு, இடையூறு ஏற்படாது என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ருவிட்டர் பதிவொன்றின் ஊடாக அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் நடந்த சம்பவம் தொடர்பில் பக்கசார்பற்ற மற்றும்

15

## ‘வடக்கின் பெரும் போர்’ துடுப்பாட்ட போட்டி இன்று

### பார்வையாளர்களுக்கு அனுமதியில்லை டான் செய்தி அலைவரிசையில் நேரலை




யாழ்ப்பாணம், ஏப். 21

வடக்கின் பெரும் போர் என்று வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி - சென். ஜோன்ஸ் கல்லூரிகளுக்கு இடையிலான துடுப்பாட்டப் போட்டி இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகிறது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் சனிக்கிழமை வரை தொடர்ந்து மூன்று

15

## எரிபொருள் பவுசரை தீயிட கலவரக்காரர்கள் முயற்சி!

### வெளியானது கலவர காணொலி

கேகாலை, ஏப். 21

கேகாலை ரம்புக்கனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற கலவரத்தின் போது சிலர் எரிபொருள் பவுசரை தீயிட முயன்ற காணொலி வெளியானது.

கேகாலை - ரம்புக்கனையில் எரி

15

## நெருக்கடியை சமாளிக்க இலங்கைக்கு சீனா உதவி!

### இந்தியா, ஐ. எம். எவ்வுடன் பேச்சு நடக்கையில் அந்நாடு அறிவிப்பு!

பீஜிங், ஏப். 21

நெருக்கடி நிலைமையை சமாளிப்பதற்கு இலங்கைக்கு சீனா அவசர மனிதாபிமான உதவிகளை வழங்கத் தீர்மானித்துள்ளது.

15

## சிரித்துக்கொண்டு படுகொலை செய்ய கோட்டாபயவினால் மாத்திரமே முடியும்

### சபையில் அநுரகுமார எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு, ஏப். 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு நாட்டு மக்கள் மீது எவ்விதமான அக்கறையும் இல்லை. அவரால் மாத்திரமே சிரித்துக்கொண்டே மனிதப் படுகொலை செய்ய முடியும் என மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அனுர குமார திசாநாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் கருத்து வெளியிடும்போதே அவர் இதனை கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நாட்டு மக்கள் இன்று ஒருவேளை உணவின்றி பட்டினி

15

## மக்கள் பிரச்னைகளை தீர்க்காவிடின் மேலும் வன்முறைகள் வெடிக்கலாம்!

### அரசுக்கு ரணில் விக்ரமசிங்க எச்சரிக்கை



கொழும்பு, ஏப். 21

எரிபொருள் நெருக்கடி உள்ளிட்ட மக்கள் எதிர்நோக்கும் பிரச்னைகளுக்கு பாராளுமன்றமும் அரசாங்கமும் தீர்வு காணத் தவறினால் நாட்டில் மேலும் வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கக்கூடும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க எச்சரித்துள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், ரம்புக்கனை அமைதியின்மையை அரசியலாக்க வேண்டாம் என அரசாங்கத்தை வலியுறுத்தினார்.

ரம்புக்கனை கல

15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

## இப்படியும் நடக்கிறது...!

ஜனாதிபதியை பதவி விலகச் சொல்லி போராட்டங்கள் நாடுமுழுவதும் நடந்துகொண்டிருக்க, கடைசிக் கட்டத்தில் அவர் பதவி விலகநேர்ந்தால், அப்போது யார் பிரதமராக இருக்கின்றார்களோ அவரே உடனடியாக ஜனாதிபதியாக நியமிக்கப்படவேண்டும். இதுவே நமது அரசியலமைப்பு சொல்கின்ற தீர்வு.

இரண்டு தடவை ஜனாதிபதி பதவியிலிருந்த ஒருவர் மூன்றாவது தடவை பதவியில் இருப்பதற்காக தேர்தலில் போட்டியிடமுடியாது. அதாவது, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகினால், பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஏற்கனவே இரண்டு தடவை பதவியில் இருந்தவர் என்பதால் அவர் ஜனாதிபதியாக முடியாது என்று கூறப்படுகின்றது. அப்படியெனில், அடுத்த தெரிவு - அரசியலமைப்பு ரீதியாக சபாநாயகர்தான். அதாவது, சபாநாயகர் ஜனாதிபதியாக பதவியேற்கவேண்டும். அடுத்த தேர்தல் வரை அவர் பதவியில் இருக்கலாம்.

இங்கேதான் சில சட்ட வியாக்கியானங்களை பலரும் சொல்கின்றனர். அதாவது, மஹிந்தர் மூன்றாவது தடவை ஜனாதிபதி பதவிக்கு தேர்தலில் போட்டியிட முடியாதே தவிர, ஜனாதிபதி பதவி விலகினால் பிரதமராக இருக்கும் அவர் ஜனாதிபதி பதவியை வகிக்க முடியாது என்று அரசியலமைப்பில் தெளிவின்றி காணப்படுவதால், அவர் நியமிக்கப்படலாம் என்று சில சட்டவாளர்கள் வியாக்கியானம் சொல்கின்றனர்.

இந்த வியாக்கியானத்தை வைத்துக்கொண்டே, ஜனாதிபதியை பதவி விலகுமாறும், தான் (பிரதமர்) ஜனாதிபதியாகி சஜித், ரணில், ஆகியோரை உள்ளடக்கிய இடைக்கால அரசை நியமித்து, ஆட்சியை சுமுகமாக கொண்டு போகலாம் என்றும் மஹிந்த தரப்பிலிருந்து ஜனாதிபதிக்கு சில அழுத் தங்கள் பிரயோகிக்கப்படுவதாகவும் சில முகநூல் செய்திகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி பதவி விலகலாம் என்றும் அவர் அவ்வாறு பதவி விலகினால், பிரதமர் அந்த பதவிக்கு தெரிவாகுவார் என்றும் விளக்கமளித்த முன்னாள் தேர்தல்கள் ஆணைக்குழுத் தலைவர் மஹிந்த தேசப்பிரிய, மஹிந்த இரண்டு தடவைகள் ஜனாதிபதியாக இருந்தவர் என்பதால், அடுத்த தெரிவாக சபாநாயகர் அந்த பதவியை வகிக்கலாம் என்றும் விளக்கமளித்திருந்தார்.

ஆக, ஜனாதிபதி பதவி விலகினாலும், உடனடியாக என்ன நடக்கும் என்பதில்கூட குழப்ப நிலையே நீடிக்கின்றது.

இந்த வேளையில், சில மாதங்களுக்கு முன்னர் கேட்ட தகவல் ஒன்றுதான் இப்போது ஞாபகத்திற்கு வருகின்றது.

அப்போது மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்தார். அவரது அமைச்சரவையில் முக்கிய அமைச்சராக இருந்த ஒருவர் அண்மையில் சொன்ன சம்பவம் ஒன்று இது.

மஹிந்த ஜனாதிபதியாக இருந்தபோது அவரே பாதுகாப்புக்கும் பொறுப்பான அமைச்சர். அப்போது இன்றைய ஜனாதிபதி அந்த அமைச்சின் செயலாளர் மாத்திரமே. அதாவது, அவர் ஒரு நிர்வாக அதிகாரி மாத்திரமே.

இந்த அமைச்சருக்கு, பாதுகாப்பு அமைச்சில் ஓர் அலுவல் நடந்தாகவேண்டும். இவர் ஜனாதிபதியைச் சந்தித்து தனது தேவை குறித்து உதவி கேட்டிருக்கிறார்.

எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டிருந்த ஜனாதிபதி, கடைசியில் முகத்தை நெழித்துக்கொண்டு சொன்னாராம், அவரட்டை நீரே நேரில் கேளுமன் என்று.

“அவரட்டை“ என்று அவர் சொன்னது வேறு யாரையும் அல்ல. அப்போதைய அந்த அமைச்சின் செயலாளரிடம் தான்.

இந்தச் சம்பவம்தான் அந்தச் செய்தியை முகநூலில் படித்தபோது ஞாபகம் வந்தது. ஜனாதிபதி பதவி விலகுவார் என்று அவரை தெரிந்தவர்கள் எவரும் நம்பப்போவதில்லை.

நாட்டு நிலைமைகள் இப்படி போய்க்கொண்டிருக்க, நமது தலைவர்கள் கூடிக்கூடி கதைக்கின்ற செய்திகள்தான் வருகின்றன.

அரசியலமைப்பின் இருபதாவது திருத்தத்தை இரத்துச் செய்து, பத்தொன்பதை கொண்டுவருவதை ஏற்றுக்கொள்ளும் வகையில் அரசியலமைப்புக்கு இருபத்தியோராவது திருத்தத்தை கொண்டுவர ஜனாதிபதியும் தனது உரையொன்றில் சம்மதம் தெரிவித்திருந்தார். பிரதமர் மஹிந்தரும் அரசியலமைப்பில் திருத்தம்செய்ய யோசனை ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பிக்க இருப்பதாக அறிவித் திருக்கின்றார்.

இந்த வேளையில், வரவிருக்கும் இருபத்தியோராவது திருத்தத்தில் நமக்கு சாதகமான எந்த விடயங்களை சேர்க்க வேண்டும் என்று யோசிக்காமல், திருத்தங்கள் வேண்டாம், ஒரேயடியாக புதிய அரசியலமைப்புக்கே சென்றுவிடுவோம் என்று நமது தலைவர்கள் சிலர் வழக்கம்போல பேசத் தொடங்கியிருக்கின்றனர்.

பிரிக்கப்படாத நாட்டுக்குள் சமஷ்டியை புதிய அரசியலமைப்பில் கொண்டு வருவோம் என்று கூறத்தொடங்கியிருக்கின்றனர்.

அப்படி கேட்டால்தானே, சிங்களவர்களை இனியும் நம்பக்கூடாது, சர்வதேசத்தை மட்டும் நம்புகிறோம் என்றும், சர்வதேசம் எங்களோடுதான் இருக்கின்றது என்றும் கதை விட்டுக்கொண்டு மீண்டும் வரலாம்!

**- ஊர்க்குருவி**

# மாக்சிச லெனினிச கட்சியின் 7ஆவது தேசிய மாநாடு நிறைவு

மாத்தளை, ஏப். 21

புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சியின் 7ஆவது அனைத்திலங்கை மாநாடு கடந்த 15,16,17ஆம் திகதிகளில் மாத்தளையின் உக்குவளை நகரில் இடம்பெற்றது.

இந்த மாநாட்டில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களில் இருந்தும் கட்சிப் பிரதிநிதிகளின் பங்கேற்றதுடன், ஐந்து பேர் கொண்ட தலைமைக் குழுவின் தலைமையில் மாநாடு நடைபெற்றது.

இதன்போது, நாடும் மக்களும் இன்று எதிர்நோக்கி நிற்கும் மோசமான அரசியல், பொருளாதார நெருக்கடிகள் பற்றியும் அதனால் மக்கள் வெளிப்படுத்தி வரும் பிரதிபலிப்புகளையும் மாநாடு கவனத்தில் எடுத்து விவாதித்தது. குறிப்பாக கடந்த இரண்டு வாரங்களுக்கு மேல் கொழும்பிலும் சுற்றுப்புற இடங்களிலும் நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் இடம்பெற்று வரும் மக்களின் தன்னெழுச்சி எதிர்ப்புப் போராட்டங்கள் பற்றியும் பேசப்பட்டன.

இன்றைய ராஜபக்ச குடும்ப ஆட்சிக்கு எதிராக இடம்பெற்று வரும் மக்களது தன்னெழுச்சிப் போராட்டங்களைக் கட்சி ஆதரிப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. அத்துடன் மக்க




ளின் இன்றைய தன்னெழுச்சிப் போராட்டங்களை ஆளும் வர்க்க சக்திகள் அடுத்து வரவுள்ள தத்தமது ஆட்சி அதிகார வேட்கைக்காகவும் பாராளுமன்ற பதவிகளுக்காகவும் பயன்படுத்த முன்நிற்கிறது. எனவே 1978இல் கொண்டு வரப்பட்ட இன்றைய அரசியலமைப்பைத் தூக்கி வீசி நாட்டிற்கும் மக்களுக்கும் முற்றிலும் சேவை செய்யக்கூடிய புதிய அரசியலமைப்பு வரையப்படுவது அவசியம் என்று வலியுறுத்தப்பட்டது.

மேலும், இத்தகைய அரசியலமைப்பில் தேசிய பொருளாதாரம், தேசத்தின் இறைமை, சுதந்திரம், சுயாதிபத்தியம், தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பன உள்ளடக்கப்படுவதைக் கட்சி வலியுறுத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## அங்குரார்ப்பண நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான நிலையான வைப்புத் திட்டத்தை அங்குரார்ப்பணம் செய்யவுள்ளது.

இந்த நிகழ்வு இன்று வியாழக்கிழமை காலை 8.30 மணிக்கு கல்லூரியின் றொமைன் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்கத் தலைவர் ம. வித்தியானந்தநேசன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக தியாகி அறக் கொடை நிறுவனத்தின் நிறுவுநர் வாமதேவா தியாகேந்திரன் பங்கேற்பார்.

சிறப்பு விருந்தினர்களாக கல்லூரியின் ஓய்வு நிலை ஆசிரியை திருமதி ஆர். பாலசுந்தரம்பிள்ளை, பொறியியலாளர் (ஐக் கிய இராச்சியம்) த. ரவிராஜ் ஆகியோர் கலந்துகொள்வர். (ஐ)

## ஞானசாரரின் குழுவில் ஒருவர் விலகினார்!

கொழும்பு, ஏப். 21

பொதுபல சேனா அமைப்பின் பொதுச் செயலாளர் ஞானசார தேரர் தலைமையில் நியமிக்கப்பட்ட ஒரே நாடு , ஒரே சட்டம் ஜனாதிபதி செயலணியில் இருந்து உறுப்பினர் ஒருவர் விலகியுள்ளார்.

அஸீஸ் நிசாருதீன் முஸ்லிம் உறுப்பினரே அந்தக் குழுவிலிருந்து விலகியுள்ளார். (ஐ)

## வாகன இலக்கத் தகடுகளை பெறுவதற்கு இறுதி சந்தர்ப்பம்!

யாழ்ப்பாணம், ஏப். 21

2019 ஆம் ஆண்டு வாகன இலக்கத் தகடுகளுக்கு விண்ணப்பித்து அவற்றைப் பெறாதவர்களுக்கு இறுதிக் காலக்கெடுவை மோட்டார் போக்குவரத்து திணைக்களத்தின் யாழ். அலுவலகம் விடுத்துள்ளது.

இது குறித்து அந்தப் பணிமனை விடுத்த செய்திக் குறிப்பில்,

எமது தலைமை அலுவலகத்திலிருந்து 2019 ஜனவரி - டிசெம்பர் வரையான காலப் பகுதியில் எமது அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்ற வாகன இலக்கத் தகடுகளில் உரிமையாளர்களால் பெறப்படாத வாகன இலக்கத் தகடுகள் எதிர்வரும் ஜூன் மாதம் மீளவும் தலைமை அலுவலகத்துக்கு அனுப்பப்படவுள்ளன.

“எனவே, வாகன இலக்கத் தகடுகளை வாகன உரிமையாளர்கள் வாகனப் பதிவு புத்தகம், தேசிய அடையாள அட்டை, பழைய வாகன இலக்கத் தகடுகள் மற்றும் வாகன இலக்கம் பொறித்த ஒட்டும் தாள் (ஸ்ரிக்கர்) என்பவற்றை எதிர்வரும் மே 20ஆம் திகதிக்கு முன்னர் யாழ். மாவட்ட மோடார் வாகனப் போக்குவரத்து அலுவகத்தில் சமர்ப்பித்து பெற்றுக்கொள்ள முடியும்”, என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## ரம்புக்கனை சம்பவம் ரிஷாத் கடும் கண்டனம்!

மன்னார், ஏப். 21

மக்களுக்கு சேவை செய்வதே எமது தலையாய கடமை என்பதை ஒவ்வோர் அரசியல்வாதியும், அதிகாரிகளும் மனதில் கொள்ள வேண்டும் என்று அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற அசம்பாவித சம்பவம் தொடர்பில் கருத்து தெரிவித்துள்ள அவர் மேலும் கூறியவை வருமாறு,

“தங்கள் எதிர்காலத்துக்காகவும் உரிமைகளுக்காகவும் போராடி உயிர்நீத்த இளைஞருக்கும், பலத்த காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளவர்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தையும் வருத்தத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

பொலிஸாரின் இவ்வாறான காட்டுமிராண்டித்தனமான செயல்பாடுகளை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம். இவை நிறுத்தப்பட வேண்டும். அத்துடன், குறித்த சம்பவத்துடன் சம்பந்தப்பட்ட அனைத்து அதிகாரிகளும் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

குறித்த, மக்கள் ஆர்ப்பாட்டத்தை தடுத்து நிறுத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் குறைந்தபட்ச படையணியினாலேயே ஓர் உயிர் காவுகொள் ளப்பட்டிருக்கின்றது என்றால், அதிகபட்ச படைகளை பயன்படுத்தி இருப்பின் என்ன நேர்ந்திருக்கும்?

ஆகையால், மேற்படி சம்பவத்தின் பின்புலத்தில் அரசியல் சக்திகள் இருந்தால், அதனையும் தீரவிசாரித்து, கண்டறிந்து, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்று வேண்டு கோள் விடுக்கின்றேன்” என்றார். (ஐ)

ஈழநாடு
வார இதழ்
Eelanadu
21.04.2022 வியாழக்கிழமை
பிலவ வருடம், சித்திரை 08

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 730 1370

# குடும்ப ஆட்சியை எதிர்த்தல்?

சிங்கள அரசியல் வரலாற்றில், குடும்ப செல்வாக்கையும் சிங்கள அதிகாரமையத்தையும் பிரிக்க முடியாது. ராஜபக்ஷக்கள் அரசியலில் கோலோச்சுவதற்கு முன்பதாகவே, சேனநாயக்க குடும்பமும், பண்டாரநாயக்க குடும்பமும் சிங்கள அதிகாரத்தை அலங்கரித்திருக்கின்றனர். ரணசிங்க பிரேமதாஸ ஒருவர்தான் இதில் விதிவிலக்கானவர். அடிமட்டத்திலிருந்து, படிப்படியாக வளர்ந்து, அதிகாரத்தைக் கைப்பற்றியவர் பிரேமதாஸ.

2005இல், மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்துதான், மெதமுல்லை ராஜபக்ஷக்களின் குடும்ப அரசியல் தெற்குக்கு அறிமுகமானது. சேனநாயக்க மற்றும் பண்டாரநாயக்கக்களின் அதிகாரம் என்பது, அடிப்படையில் சிங்கள மேட்டுக்குடியின் செல்வாக்காகும். ஒப்பீட்டடிப்படையில், ராஜபக்ஷக்கள் கொழும்பின் சிங்கள மேட்டுக்குடியால் கண்டுகொள்ளப்படாதவர்களாவர்.

சந்திரிகாவின் வார்த்தையில் கூறுவதானால், கல்வியறிவற்ற, கலாசாரமற்ற கூட்டம். சந்திரிகா குமாரதுங்க, ஜனாதிபதியாக இருந்த காலத்தில்தான், மஹிந்த ராஜபக்ஷ பிரதமரானார். மஹிந்த ராஜபக்ஷவை, பிரதமராக நியமிப்பதற்கு சந்திரிகாவுக்கு விருப்பம் இருந்திருக்கவில்லை. ஏனெனில், ராஜபக்ஷவை, அவர் ஒரு பொருட்டாகக் கொள்ளவில்லை. அப்போது, மஹிந்த ராஜபக்ஷவை பிரதமாராக்குவதில், மங்கள சமரவீரவே பிரதான பங்கு வகித்திருந்தார். ஆனால், அதிகாரத்தை கைப்பற்றிய பின்னர், நண்பரா, தனது குடும்பமா என்னும் நிலைமையேற்பட்டபோது, மஹிந்த குடும்பத்தையே முதன்மையானதாக தெரிவு செய்தார். மங்களவை ஓரம் கட்டினார்.

இப்படித்தான் ராஜபக்ஷக்களின் தென்னிலங்கை சாம்ராச்சியம் கட்டியெழுப்பப்பட்டது. விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தின் போது, இன்று ராஜபக்ஷக்களை எதிர்க்கும் அனைவருமே, ராஜபக்ஷக்களின் யுத்தத்திற்கு முண்டுகொடுத்தவர்கள்தான். கோட்டாபய ராஜபக்ஷ சிரித்துக் கொண்டே கொலை செய்பவர் - என்று சத்தமிடும் ஜே. வி. பி. தலைவர் அநுரகுமார திஸநாயக்க, தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட அநியாயங்களை கண்டும் காணாமல் இருந்தவர்தான். அதற்கு எதிராக ராஜபக்ஷக்களை கண்டிக்காதவர்தான்.

இப்போது, அனைவருமே ராஜபக்ஷக்களின் குடும்ப ஆட்சிக்கு முடிவுகட்ட வேண்டுமென்னும் உறுதிப்பாட்டில் ஒன்றுபட்டிருக்கின்றனர். காலிமுகத்திடலில், ஆங்கிலம் பேசும் கொழும்பின் மேட்டுக்குடியினர் ஒன்றுகூடி, ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறு கோருகின்றனர். இனவாதம், மதவாதம் வேண்டாம் என்கின்றனர். இதனைத்தான் கடந்த 70 வருடங்களுக்கும் மேலாக, தமிழ்த் தலைவர்கள் கோரிவந்தனர். அப்போது கொழும்பின் மேட்டுக் குடியான, சேனநாயக்க குடும்பமும், பண்டாரநாயக்க குடும்பமும் தமிழ் மக்களின் ஜனநாயகக் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்கவில்லை.

ராஜபக்ஷக்களுக்கும் ஏனைய தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் இடையிலான அடிப்படையான வேறுபாடு என்ன? ஒன்றுதான் - அதாவது, ஏனையவர்கள் குடும்ப செல்வாக்கை கொண்டிருந்தாலும் தங்களின் குடும்பம் மட்டும்தான் அரசியலில் கோலோச்ச வேண்டுமென்னும் நோக்கில் திட்டமிட்டு செயல்படவில்லை. ஆனால், ராஜபக்ஷக்களோ, தங்களுடைய குடும்ப எல்லைக்கு வெளியில் எவருமே அதிகாரத்தில் செல்வாக்குச் செலுத்தக்கூடாதென்று எண்ணுகின்றனர். அந்த அடிப்படையில் திட்டமிட்டு மற்றவர்களை ஓரம் கட்டுகின்றனர்.

முக்கிய பொறுப்புக்கள் அனைத்தையும் தங்களது குடும்பத்தின் செல்வாக்குக்குள் வைத்திருக்கின்றனர். இந்த வகையான குடும்ப அதிகாரத்தைத்தான் இப்போது தென்னிலங்கையின் படித்த, நடுத்தர மற்றும் மேட்டுக்குடி மக்கள் எதிர்கின்றனர். இந்த எதிர்ப்பே இப்போது மேலும் விரிவு பெற்று, மக்கள் மயமாகிவருகின்றது. குடும்ப ஆட்சி எதிர்க்கப்பட வேண்டியதுதான் ஆனால், அதனை எதிர்ப்பதுடன் தமிழர் பிரச்னை தீர்ந்துவிடப் போவதில்லை. இந்த அடிப்படையில்தான், தமிழ்த் தேசிய தரப்புக்கள் சிந்தித்து செயலாற்ற வேண்டும். ஒவ்வொரு வாய்ப்புக்களையும் பயன்படுத்தி, குறிப்பிட்ட காலத்தில் எதைப் பெற முடியுமோ, அதனை பெறுவது தொடர்பில் சிந்தித்து செயலாற்ற வேண்டும். காலத்தைத் தவற விட்டுவிட்டு, பின்னர் மற்றவர்களை குற்றம்சாட்டுவதில் பயனில்லை.

# அராஜகத்தின் வெளிப்பாடு!

**அலசுவது இராஜதந்திரி**

*அரசின் பொருளாதாரக் கொள்கைக்கு எதிரான காலிமுகத்திடல் அஹிம்சைவழி ஆர்ப்பாட்டம் பத்தாவது நாளையும் கடந்துள்ள நிலையில் கொழும்பை அண்டிய ரம்புக்கனை பகுதியில் பொலிஸாரின் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி 41 வயதான நபர் ஒருவர் பலியானார்.*

*காலிமுகத்திடலில் நாளுக்கு நாள் மக்களின் அமைதிவழி ஆர்ப்பாட்டம் வலுவடைந்து வருகின்றது. நேற்றுமுன்தினம் மக்கள் விடுதலை முன்னணியின் தேசிய மக்கள் சக்தி அமைப்பு பேருவளையிலிருந்து கொழும்பின் விஹாரமாதேவி பூங்காவரை மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்தியிருந்தது.*

*இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலத்தை சகல விதத்திலும் உணர்வுபூர்வமானதென்றே குறிப்பிட முடியும். ஏனெனில், வயது வேறுபாடின்றி, ஆண், பெண் இளையோர், முதியோர் என்று அனைத்து தரப்பினரும் அந்தப் பெரும் பேரணியில் பங்குபற்றி அரசை கண்டிக்கும் கோஷங்களை போட்டமை ஒருபுறமிருக்க, அரசை கண்டிக்கும் பதாகைகளையும் தாங்கியவர்களாக நடைபவனியாக சென்றமை பார்ப்போர் மனதைக் கலக்க வைத்திருந்தது.*

*ஏனெனில், அந்த பேரணி ஏனைய பேரணிகளை விட அடிப்படைத் தேவைகளையும் பெற முடியாத அப்பாவி மக்களின் மனத்தாங்கலை வெளிப்படுத்துவதாகவே அமைந்திருந்தது.*

*காலிமுகத்திடல் அஹிம்சை வழிப் போராட்டம் நாடளாவிய ரீதியில் படிப்படியாக பிரதிபலிக்க ஆரம்பித்திருப்பதன் வெளிப்பாடாகவே ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டமும் அங்கே பொலிஸார் நடத்திய துப்பாக்கி பிரயோகத்தில் 41 வயதான நபர் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவமும் விளங்குகின்றது.*

*காலிமுகத்திடல் அஹிம்சைவழி ஆர்ப்பாட்டம் தற்போது சூடுபிடித்து வரும் தருணத்தில் இந்தப் போராட்டம் நாடளாவிய ரீதியில் பரவ ஆரம்பித்துள்ளதுடன் இந்த ஆர்ப்பாட்டத்தின் தொனிப்பொருளாக ஓங்கி ஒலிக்க ஆரம்பித்திருப்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உட்பட ராஜபக்ஷ குடும்பத்தினர் மீதான வசைபாடலாகும். இலங்கையில் ஜே. ஆர். ஜெயவர்த்தன முதல் கோட்டாபய ராஜபக்ஷ வரை ஆறு நிறைவேற்றதிகார ஜனாதிபதிகள் இருந்துள்ளனர். ஆனால், இவர்களில் கோட்டாபய ராஜபக்ஷவே மிகவும் கண்டனத்துக்குள்ளான ஜனாதிபதியாகவும், நிரவாகத் திறமையற்றவராகவும் இருப்பதை அவதானிக்க முடிகின்றது.*

*இலங்கையின் வரவாற்றில் மிக நீண்ட நாட்களாக மழை, வெயில் என்பவற்றை பொருட்படுத்தாமல் இடம்பெறும் ஆர்ப்பாட்டமாகவே காலிமுகத்திடல் ஆர்ப்பாட்டத்தை கொள்ள முடியும்.*

*இதேவேளை, அரசியல் அவதானிகள் மத்தியில் எழுகின்ற முக்கிய கேள்வியாக இருப்பது ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தமது பதவியிலிருந்து மக்களின் அழுத்தம் காரணமாக பதவி விலக முடியும்.*



*இருப்பினும் மாற்றீடாக நாட்டின் தலைமைத்துவத்தை ஏற்கக்கூடிய ஒரு தலைவர் இலங்கையில் இருக்கின்றாரா என்பதே அந்தக் கேள்வியாகும்.*


*தற்போதைய ஜனாதிபதி பதவி விலக வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. ஆயினும் தற்போதைய அரசியல் நிலவரத்தையும் அத்துடன் பொருளாதார நிலவரத்தையும் கையாளக்கூடிய ஓர் உறுதியான தலைமைத்துவமே தற்போது நாட்டுக்கு தேவைப்படுகின்றது. இந்தத் தலைமைத்துவத்துவத்துக்கு தகுதியானவர்கள் காணப்படுகின்றனரா? என்பதுகூட அரசியல் அவதானிகள் மத்தியில் எழுந்துள்ள பிரதான கேள்வியாக இருக்கின்றது.*

*இத்தகைய பின்னணியிலேயே அரசியல்வாதிகள் மட்டுமல்ல. துறைசார் வல்லுநர்கள், புத்திஜீவிகள், தொழிலதிபர்கள் போன்றோர் தற்போதைய தருணத்தில் நாட்டு நலன் கருதிய தீர்மானங்களை துணிச்சலோடு கூட்டாக எடுப்பதற்கு முன்வரவேண்டும் என்ற கண்ணோட்டம் நாட்டில் பரவலாக நிலவுவதையும் தற்போது சிறிதும் பெரிதுமாக இடம்பெறும் கருத்தரங்குகள், மற்றும் கலந்துரையாடல்களில் சுட்டிக் காட்டப்பட்டு வருவதையும் அவதானிக்க முடிகின்றது.*

*இதேவேளை இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனையும் இலங்கையின் நிதி அமைச்சர் அலி ஷப்ரி தலைமையிலான குழுவினர் சந்தித்துள்ளனர். இதன்போது, இலங்கை சார்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் இலங்கைக்கு உதவி வழங்கும் விதத்தில் பரிந்தரை செய்யுமாறும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் இலங்கை பிதிநிதிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். இதன்மூலம் சர்வதேச அரங்கில் இந்தியாவின் தராதரத்தையும் இலங்கையின் தராதரத்தையும் நன்கு எடைபோடக்கூடியதாக இருக்கின்றது.*

*எனவே இலங்கையில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகி புதியதோர் ஆட்சிக்கட்டமைப்பு கட்டி எழுப்பப்பட வேண்டியதன் அவசியம் ஏற்படும்பட்சத்தில்கூட இந்தியா பொருளாதார ரீதியாக மட்டுமல்ல. அரசாட்சி விடயத்திலும் இலங்கைக்கு உதவ வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'






**மேடம்**
எதிர்பாராத செலவுகள் ஏற்பட்டாலும் உங்களுக்கு மகிழ்ச்சி குறையாது. பேச்சில் கவனம் செலுத்தினால் பிரச்னை எதுவும் வராது. வெளியிடத்தில் அடக்கமாக நடந்து கொள்வது நல்லது.

**இடபம்**
உற்சாகமாக உழைப்பீர்கள். சுறுசுறுப்பு அதிகரிக்கும். எந்தவொரு விஷயத்திலும் அவசர முடிவு எடுக்க வேண்டாம். உங்களுக்கு வரவேண்டிய பணம் வீடு தேடி வரும்.

**மிதுனம்**
உறவினர்களுக்கு உதவி செய்து மகிழும் நாள் தடைகளை தாண்டி முன்னேறுவீர்கள். மன பலம் கூடும். பணியிடத்தில் நீங்கள் செய்த நற்செயல்களால் பாராட்டு கிடைக்கும்.

**கடகம்**
உறவினருடன் மனஸ்தாபம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுங்கள். பணிபுரியும் இடத்தில் நிதானத்தைக் கடைப்பிடிப்பது நல்லது. பணிபுரிபவர்களுடன் வீண்வாதம் செய்ய வேண்டாம்.

**சிம்மம்**
உணவு விஷயத்தில் கவனம் செலுத்துவீர்கள். பணியிடத்தில் எதையும் சிந்தித்து செய்வது நல்லது. திட்டமிடாத பயணங்களைத் தள்ளிவைப்பது நன்மை தரும்.

**கன்னி**
சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடைவீர்கள். தந்தையின் ஆரோக்கியம் பற்றிய கவலை நீங்கும். இழந்திருந்த உற்சாகத்தை இன்று மீண்டும் பெறுவீர்கள்.

**துலாம்**
உங்களால் தந்தைக்கு பெருமிதம் ஏற்படும். நன்மை அதிகரிக்கும். நண்பர்கள் யார், பகைவர்கள் யார் என்பதை கண்டு விழிப்படைவீர்கள். இன்று எதிலும் யோசித்து செயல்பட வேண்டிய நாள்.

**விருட்சிகம்**
குடும்பத்தில் ஒற்றுமை பலப்படும். மகிழ்ச்சியில் திளைப்பீர்கள். பணம் கொடுக்கல் வாங்கலில் எச்சரிக்கையாக செயல்படுவீர்கள். நீண்ட நாளுக்கு பிறகு மீண்டும் பணியிடத்தில் உற்சாகம் கூடும்.

**தனுசு**
பேச்சைக் குறைப்பது நன்மை தரும். தன்னம்பிக்கை அதிகரிக்கும். மதிப்பிற்குரியவர்களின் நட்பைத் தக்க வைத்துக் கொள்வீர்கள். பணியிடத்தில் தீவிரமான முயற்சியால் வெற்றியை எதிர்பார்க்கலாம்.

**மகரம்**
வாகனம் ஓட்டும்போது நிதானத்தை கடைப்பிடிக்க வேண்டும். அசையா சொத்துக்கள் வாங்குவதை தள்ளி வைப்பது நல்லது. அக்கம், பக்கத்தினரிடம் அளவாகப் பேசுவது நன்மை அளிக்கும்.

**கும்பம்**
உடல் ஆரோக்கியத்தில் இருந்து வந்த பிரச்னை தீரும். கொடுக்கல், வாங்கலில் கவனமாக இருக்க வேண்டிய நாள். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிக்கான ஏற்பாடு தீவிரமாகும்.

**மீனம்**
பேச்சிலும், செயலிலும் கவனமாக இருக்க வேண்டிய நாள். பிறரிடம் குடும்ப ரகசியங்களை பகிர்ந்து கொள்ள வேண்டாம். குழந்தைகளுக்கு நன்மை ஏற்படும் நாள். அளந்து பேசுவது நல்லது.

# பிரதமர் மோடியை விமர்சிப்பவர்கள் குறைப்பிரசவத்தில் பிறந்தவர்கள்!

## நடிகர் பாக்யராஜ் கடும் தாக்கு!!

சென்னை, ஏப்.21

பிரதமர் மோடியை விமர்சிப்பவர்கள் குறைப்பிரசவத்தில் பிறந்தவர்கள் என நடிகர் பாக்யராஜ் விமர்சித்துள்ளார்.

சென்னை தி.நகரில் உள்ள பா.ஜ.க அலுவலகத்தில் “பிரதமரின் மக்கள் நலத்திட்டங்கள் - புதிய இந்தியா 2022” என்ற புத்தக வெளியீட்டு விழா நடைபெற்றது. இதில், தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை புத்தகத்தை வெளியிட, திரைப்பட இயக்குனரும் நடிகருமான பாக்யராஜ் பெற்றுக் கொண்டார். பின்னர் பாக்யராஜ் தெரிவித்ததாவது,

“தமிழக பா.ஜ.க தலைவராக அண்ணாமலை நியமிக்கப்பட்டது சரியான ஒன்று. தகுதியுள்ளவரை தான் தேர்ந்தெடுத்துள்ளனர். எங்கு வெளிநாடு சென்றாலும் பிரதமர் மோடி ஓய்வின்றி உழைக்கிறார். எத்தனை பேருக்கு இந்த வயதில் துடிப்புடன் இருப்பார்கள் என்பது சந்தேகம். இந்தியாவுக்கு இப்படி எனர்ஜியான பிரதமர் தான் தேவை.

“பிரதமர் மோடியை விமர்சிப்பவர்கள் 3 மாத குறைப்பிரசவத்தில் பிறந்தவர்கள் என நினைத்துக்கொள்ளுங்கள். இத்தகையவர்களை போன்றவர்கள் நல்லவற்றையும் பேசமாட்டார்கள், பிறர் சொல்வதையும் கேட்க மாட்டார்கள். குறைப்பிரசவத்தில் பிறந்தவர்களுக்கு தான் வாய், காது இருக்காது. எனவே, அதைப்பற்றி கவலைப்படத் தேவையில்லை. - இவ்வாறு அவர் பேசினார்.






புதுச்சேரி தென்னம்பாக்கம் அழகர் கோயிலில் குழந்தை பாக்கியம், திருமணம், வேலை வாய்ப்பு என எந்த காரியத்தை நினைத்து சிலை செய்து வைத்தாலும் அது நிறைவேறும் என்பது ஐதீகம். எனவே கோயிலைச் சுற்றியுள்ள பகுதியில் பல்லாயிரக்கணக்கான சிலைகள் வேண்டுதலுக்காக வைக்கப்பட்டுள்ளன.

# தமிழகத்தில் முகக்கவசம் கட்டாயம்

தமிழகத்தில் பொதுமக்கள் முகக்கவசம் கட்டாயம் அணிய வேண்டும் என்று மக்கள் நல்வாழ்வு மற்றும் மருத்துவத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

பொது இடங்களுக்கு செல்லும் மக்கள் கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் வேண்டுகோள் விடுத்துள்ளார். சைதாப்பேட்டை போக்குவரத்து பணிமனையில் தொழிலாளர் ஓய்வு அறையை அமைச்சர்கள் மா. சுப்பிரமணியன் மற்றும் சிவசங்கர் ஆகியோர் திறந்து வைத்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய மா. சுப்பிரமணியன், நாடு முழுவதும் கொரோனா தொற்று அதிகரித்து வருவதாகவும், ஆனால் தமிழகத்தில் பதற்றமான சூழல் இல்லை என்றும் தெரிவித்தார். தமிழகத்தில் முகக்கவசம் அணியாவிட்டால் அபராதம் என்ற முறையே விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், பொது இடங்களுக்கு செல்லும்போது கட்டாயம் முகக்கவசம் அணிய வேண்டும் என்று அறிவுறுத்தினார்.

# பயங்கர தீ விபத்து பொருட்கள் நாசம்!



சென்னை,ஏப்.21

கிருஷ்ணகிரியை அடுத்த காவேரிப்பட்டினத்தில் இயங்கி வரும் நார் தொழிற்சாலையில், ஏற்பட்ட தீ விபத்தில் பல லட்சம் ரூபாய் மதிப்பிலான பொருட்கள் எரிந்து சாம்பலாயின.

பண்ணிஹல்லி பகுதியில், நார் தயாரிக்கும் தொழிற்சாலையில் நள்ளிரவு நேரத்தில் ஊழியர்கள் வெளியே வந்து தேநீர் அருந்திக்கொண்டிருந்த போது திடீரென தீப்பற்றியதாக கூறப்படுகிறது. அதில் தீ மளமளவென தொழிற்சாலை முழுவதும் பரவி, கொளுந்து விட்டு எரிந்தது.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு வந்த தீயணைப்புத்துறையினர் பல மணி நேர போராட்டத்திற்கு பின் தீயை அணைத்தனர்.

# விநியோக நடவடிக்கைகளின் தாமதமே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம்

## சபையில் கூறினார் காஞ்சன விஜேசேகர



**கொழும்பு, ஏப். 21**

**எரிபொருட்களை ஏற்றிச் செல்லும் ரயில்கள் மற்றும் பவுசர்களுக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கு பொலிஸ், இராணுவம் மற்றும் விமானப்படையினரின் உதவிக்கு எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர கோரிக்கை விடுத்தார்.**

விநியோக நடவடிக்கைகளின் தாமதமே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம் எனவும் அவர் கூறினார். பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிடும் போதே அவர் இந்த கோரிக்கையை விடுத்தார்.

தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், எதிர்வரும் 10 நாட்களுக்கு அவசியமான பெற்றோல் கையிருப்பில் இருப்பதாகவும் அடுத்த 14 நாட்களுக்கு தேவையான டீசல் கையிருப்பில் இருப்பதாகவும் கூறினார்.

மேலும், மின்சார சபைக்கு தேவையான எரிபொருளும் தற்போது வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அவர், விநியோக நடவடிக்கைகளின் தாமதமே எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு காரணம் எனவும் குறிப்பிட்டார். (அ)






# சாமிமலையிலும் மக்கள் போராட்டம்

கொழும்பு, ஏப். 21

மஸ்கெலியா, சாமிமலை பிரதேசத்தில் நேற்று காலை தோட்டத் தொழிலாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

சாமிமலை நகரில் இருந்து கவரவில்லை சந்தி வரை பேரணியாக சென்றனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என அவர்கள் வலியுறுத்தினர். எரிபொருள் விலை, கோதுமை மாவிலை உட்பட விலை உயர்வை கண்டித்தும் அவர்கள் கோஷம் எழுப்பினர். (அ)

# மயக்க மருந்து பற்றாக்குறை காரணமாக அவசரமற்ற சத்திர சிகிச்சைகள் நிறுத்தம்!

கொழும்பு, ஏப். 21

மயக்க மருந்துகளின் தட்டுப்பாடு காரணமாக அரசாங்க வைத்தியசாலைகளில் அவசர சத்திர சிகிச்சைகள் மாத்திரமே தற்போது மேற்கொள்ளப்படுவதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

புற்றுநோய் மற்றும் விபத்துக்கள் தொடர்பான சத்திர சிகிச்சைகள் மாத்திரம் வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படுவதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# ரம்புக்கனை சம்பவத்தால் பிரதமர் மஹிந்த கவலை!

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் இடம்பெற்ற அனர்த்தத்தால் ஆழ்ந்த மன உளைச்சலுக்கு ஆளாகியுள்ளதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விவகாரம் குறித்து பொலிஸ் தரப்பில் பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்படும் என்று தனக்கு முழு நம்பிக்கை உள்ளது எனவும் அவர் கூறினார்.

ருவிட்டரில் கருத்தொன்றை வெளியிட்டுள்ள பிரதமர்,

எதிர்ப்பை வெளிப்படுத்துவதற்கான உரிமை மக்களுக்கு உள்ளது. எனினும் ஆர்ப்பாட்டங்களின்போது அனைத்துத் தரப்பினரும் மரியாதையுடனும் கண்ணியத்துடனும் நடந்து கொள்ள வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளார். (அ)

# ரம்புக்கனை சம்பவம் 15 பொலிஸார் காயம்!

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தவர்களை கலைக்க பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கையின் போது காயமடைந்தவர்களின் எண்ணிக்கை 29 ஆக அதிகரித்துள்ளது. காயமடைந்தவர்களில் 15 பொலிஸ் உத்தியோகத்தர்கள் அடங்குவதாக பொலிஸ் மா அதிபர் சி.டி. விக்ரமரத்ன தெரி வித்தார்.

இதேவேளை, காயமடைந்து கேகாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார். (அ)

# ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு; மைத்திரிபால கடும் கண்டனம்!

கொழும்பு, ஏப். 21

"எனது தலைமையிலான நல்லாட்சி அரசின் காலத்தில் எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளவில்லை. அதேநேரம் போராட்டக்காரர்களுக்குத் துப்பாக்கிகளால் பதிலளிக்கவும் இல்லை."

- இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன



தெரிவித்தார்.

ரம்புக்கனை போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் மேலும் 24 பேர் காயமடைந்துள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பில் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும்போதே முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:-

2015ஆம் ஆண்டு நான் ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டது முதல் எனது பதவிக்காலம் முடிவடையும் வரையில் எந்தவொரு நபர் மீதும் துப்பாக்கிச் சூடு நடத்துவதற்கு நான் அனுமதிக்கவில்லை. அதேபோன்று போராட்டக்காரர்களுக்கு துப்பாக்கியால் பதிலளிக்கவும் முற்படவில்லை.

நிராயுதபாணிகளுக்குத் தோட்டாக்களை நான் பரிசளிக்கவும் இல்லை. ஆகவே, ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் மிகவும் கண்டிக்கத்தக்கதாகும்-என்றார். (அ)

# ரம்புக்கனை சம்பவத்துக்கு சங்கக்கார கடும் கண்டனம்

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் உயிரிழந்து பலர் காயமடைந்த சம்பவத்துக்கு இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் நட்சத்திர துடுப்பாட்டவீரர் குமார் சங்கக்கார தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் தனது ருவிட்டர் பதிவில்,

நிராயுதபாணியான எதிர்ப்பாளர்களுக்கு எதிராக மரண சக்தியைப் பயன்படுத்துவது மனச்சாட்சிக்கு விரோதமானது. மன்னிக்க முடியாதது.

மக்களின் உயிரைப் பாதுகாப்பது பொலிஸாரின் முதல் பொறுப்பு. இது வெட்கக்கேடான கொடூர நிகழ்வு என குறிப்பிட்டுள்ளார். (அ)

# களப்பணிகளை மட்டுப்படுத்த கிராம அலுவலர்கள் தீர்மானம்

கொழும்பு, ஏப். 21

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் விலை அதிகரிப்பு காரணமாக அலுவலக நாட்கள் மற்றும் களப்பணிகளை மட்டுப்படுத்தவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாக இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அந்த சங்கம் அரச சேவைகள் அமைச்சின் செயலாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளது.

திங்கள், வியாழன் மற்றும் சனிக்கிழமைகளில் மாத்திரம் அலுவலகம் மற்றும் களப் பணிகளில் ஈடுபடவுள்ளதாக அந்த கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முன்னர் செவ்வாய், வியாழன், சனிக்கிழமைகளில் அலுவலக செயற்பாடுகளிலும் திங்கள்கிழமை பொதுமக்கள் தினமாகவும் கிராம சேவகர்கள் பணியாற்றியிருந்தனர். (அ)

# உணவு ஒவ்வாமை காரணமாக 325 பேர் வைத்தியசாலையில்!

கொழும்பு, ஏப். 21

உணவு ஒவ்வாமை காரணமாக ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் 325 பேர் நேற்று காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். கொக்கலை முதலீட்டு வலயத்திலுள்ள ஆடைத் தொழிற் சாலையொன்றில் பணிபுரியும் ஊழியர்களே இவ்வாறு பாதிக் கப்பட்டனர்.

வாந்தி, கடுமையான தலைவலி, வயிற்றுப்போக்கு என தெரிவித்த ஊழியர்கள் நேற்று காலை மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தொழிற்சாலையில் நேற்று முன் தினம் உணவு உண்ட பின்னரே ஊழியர்களுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. சம்பவம் தொடர்பாக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (அ)



## மாட்டு வண்டியில் பாடசாலை சென்ற யூனியன் கல்லூரியின் ஆசிரியர்கள்!

யாழ்ப்பாணம், ஏப். 21

எரிபொருள் விலையேற்றத்தை கண்டித்து தெல்லிப்பழை -யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் நேற்று மாட்டு வண்டியில் பாடசாலைக்குச் சென்று கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ மற்றும் அரசாங்கத்தின் தன்னிச்சையான முடிவுகளினால் நாடு பாரிய பொருளாதார நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளதாகவும், இதனால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் இதனை எதிர்த்து நேற்று முதல் ஒரு வாரம் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட முடிவு செய்துள்ளதாகவும் 300-க்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் மற்றும் வெகுஜன அமைப்புக்களின் சம்மேளனம் என்பன அறிவித்துள்ளன.

ஆசிரியர் தொழிற்சங்கங்களும் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன. பெரும்பாலான ஆசிரியர்கள் நேற்று பாடசாலைகளுக்குச் செல்லாமல் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ்வாறான நிலையிலேயே பெற்றோல் விலையேற்றத்தை கண்டித்து நேற்று மாட்டுவண்டியில் பாடசாலைக்குச் சென்று தெல்லிப்பழை -யூனியன் கல்லூரி ஆசிரியர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர். (அ-03)

## மனித உரிமைகள் ஆணைக்குழு ரம்புக்கனை சென்று விசாரணை

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் குறித்து விசாரணை மேற்கொள்வதற்காக, மூவர் கொண்ட குழுவை நியமித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் கண்டியில் உள்ள அலுவலகத்திலிருந்து விசேட குழு ஒன்று சம்பவ இடத்துக்குச் சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து காலி, மாத்தறை, கம்புறுப்பிட்டிய, அக்குரஸ்ஸ, கண்டி, மாத்தளை, இரத்தினப்புரி, கேகாலை, அம்பலாங்கொடை, ஹற்றன், கொட்டகலை, சிலாபம், ஹப்புத்தளை, பண்டாரவளை, எல்பிட்டிய, அநுராதபுரம், மினுவாங் கொட, கெஸ்பேவ, பண்டார கம, பத்தர முல்லை உள்ளிட்ட பகுதிகளில் நேற்று ஆர்ப்பாட டங்கள் முன்னெடுக்கப் பட்டன.

மாத்தறை நகரில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தைக் கலைப்பதற்காகப் பொலிஸாரால் கண்ணீர்ப் புகைப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. அத்துடன் இதன் போது 8 பேர் கைதுசெய்யப்பட்டனர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (அ)

# ராஜபக்ஷ குடும்பம் இனி வீதியில் இறங்க முடியாது

### சுனில் ஹந்துன்நெத்தி சுட்டிக்காட்டு




**கொழும்பு, ஏப். 21**

**ராஜபக்ஷ குடும்பத்தினர் வீதியில் இனி மேல் இறங்க முடியாது என்று ஜே.வி.பியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தி தெரிவித்தார்.**

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த நாட்டில் தனி ஒரு குடும்பமாக இருக்கும் திருடர்களைப் பாதுகாப்பதற்குப் பொலிஸாரும் இராணுவத்தினரும் துணை போகவேண்டாம் என்று கேட்டுக்கொள்ள விரும்புகின்றோம்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் நாட்டிலிருந்து தப்பிச் செல்வதற்கு இடமளிக்காத வகையில் மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும் என்ற வேண்டுகோளையும் முன்வைக்கின்றேன்.

ராஜபக்ஷ குடும்பத்தினர் வீதியில் இனிமேல் இறங்க முடியாது. அவர்கள் ஹோட்டல்களிலோ, வீடுகளிலோ, எங்கேனும் தனி அறைகளிலோ அல்லது நிலத்தின் கீழான பங்கர்களிலோ பதுங்கியிருக்க முடியுமே தவிர வெளியில் அவர்கள் தலைகாட்ட முடியாது.

அவர்கள் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றாலும் வெளிநாட்டுப் பொலிஸாரின் உதவியோடு அல்லது வெளிநாட்டுத் தூதரகங்களின் உதவியோடு அவர்களை இலங்கைக்கு அழைத்து வருவோம்-என்றார். (அ)

# ரம்புக்கனை சூட்டுச் சம்பவம் அரசு பொறுப்பு கூறவேண்டும்

### ஜீவன் தொண்டமான் கடும் கண்டனம்



கொழும்பு, ஏப். 21

"மக்களால் ஜனநாயக முறையில் மேற்கொள்ளப்படும் போராட்டங்களின் போது பொலிஸார் வன்முறையை கையில் எடுத்துள்ளமையானது கண்டிக்கத்தக்கது." - என்று இ.தொ.காவின் பொதுச்செயலாளர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

நாட்டில் ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலைமையினால் மக்கள் போராட்டங்களில் ஈடுப்பட்டு வருகின்றனர். இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவத்திற்கு அரசே பொறுப்பு கூறவேண்டியுள்ளது.

ரம்புக்கனையில் பொதுமக்களால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்வார்ப்பாட்டத்தை நிறுத்துவதற்காக ரம்புக்கனையில் பொலிஸார் நடத்திய கண்ணீர்ப் புகைக்குண்டு தாக்குதலை தொடர்ந்து பொலிஸாரால் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த ஒருவர் உயிரிழந்துள்ளதுடன்,11 பேர் தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பில் பாராளுமன்றத்தில் பொறுப்பு கூறவேண்டிய அமைச்சு பதிலளித்தே ஆகவேண்டும் என்பதுடன், நாட்டில் ஜனநாயகத்திற்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறுமானால் அதை இ.தொ.கா பார்த்துக்கொண்டிருக்காது.

நாட்டில் இன்று உயிர் சேதம் ஏற்படும் அளவிற்கு இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. அரசு மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டும்-என்றார். (அ)

## ரம்புக்கனையில் தொடர் ஊரடங்கு

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் பொலிஸார் - பொதுமக்கள் மோதலை அடுத்து ரம்புக்கனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் நேற்று முன் தினம் இரவு அமுல் செய்யப்பட்ட ஊடரங்குச் சட்டம் நேற்றும் அகற்றப்படாமல் தொடர்ந்து நீடிக்கிறது.

மறு அறிவித்தல் வரை இந்தப் பகுதியில் ஊரடங்கு நீடிக்கும் என நேற்று காலை அறிவித்த பொலிஸார், ஊடரங்கு காலப்பகுதியில் பொதுமக்கள் வீடுகளை விட்டு வெளியே வர வேண்டாம் எனவும் கோரிக்கை விடுத்தனர்.

ரம்புக்கனையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போராட்டத்தின்போது பொலிஸாரால் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதுடன், இந்த மோதலில் 24க்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர். இதனையடுத்து ஏற்பட்டுள்ள பதற்றங்களுக்கு மத்தியி லேயே ரம்புக்கனையில் ஊடரங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. (அ)

# யாழில் பெரும்பாலான பாடசாலைகளில் நேற்று ஆசிரியர்கள் சமுகமளிக்கவில்லை

### வீடுகளுக்கு திரும்பிச் சென்றனர் மாணவர்கள்

யாழ்ப்பாணம், ஏப். 21

யாழ்ப்பாணத்தில் இன்று பெரும்பாலான பாடசாலைகளில் ஆசிரியர்கள் சமுகமளிக்காமையால் பாடசாலைகளுக்குச் சென்ற மாணவர்கள் உடனடியாகவே வீடுகளுக்கு திரும்பினர்.

எனினும் சில பாடசாலைகளில் குறைந்தளவான ஆசிரியர்கள் கல்விச் செயற்பாட்டை முன்னெடுத்தமையை அவதானிக்க முடிந்தது.

யாழ்ப்பாண நகர் மற்றும் புறநகர் பகுதிப் பாடசாலைகளில் நேற்று காலை மாணவர்கள் சென்றபோதும் ஆசிரியர்களை அதிகளவில் காண முடியவில்லை. பாடசாலைகள் நடைபெறுமா? இல்லையா? என்பது குறித்து அதிபர்கள் மத்தியிலும் தெளிவற்ற நிலையை அவதானிக்க முடிந்தது.

இது குறித்து அதிபர்களிடம் கேட்டபோது, பல ஆசிரியர்கள் வரவில்லை. மாணவர்களை பாடசாலையில் விடுவதா? இல்லையா? என பெற்றோர்களே தீர்மானிக்கலாம் எனக் கூறினர். இதனால் பெரும்பாலான பெற்றோர் பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றனர்.

நேற்று இலங்கை முழுவதும் தேசிய போராட்ட நாளாக அறிவித்து அனைத்து பணியிடங்களிலும் தொடர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட தொழிற்சங்கங்கள் முடிவு செய்தன.

ஆசிரியர் சங்கங்கள் உள்ளிட்ட 300க்கு மேற்பட்ட தொழிற்சங்கள் இப்போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துள்ளன.

இந்நிலையில் ஆசிரியர்கள் நேற்று கறுப்புப் பட்டி அணிந்து கொண்டு பாடசாலைகளுக்குச் செல்வார்கள் என இலங்கை ஆசிரியர் சங்கம் அறிவித்தது. எனினும் ஆசிரியர்கள் பலர் பாடசாலைக்கு நேற்று செல்லவில்லை. (அ)

## காலி பஸ் நிலையம் முன்பாக மீனவர்கள் நேற்று போராட்டம்

கொழும்பு, ஏப். 21

எரிபொருள் விலை அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து காலி-மாத்தறை வீதியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டம் காரணமாக போக்குவரத்து தடைப்பட்டது.

காலி பஸ் நிலையத்துக்கு முன்பாக மீனவர்களே இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் தென்மாகாண ஆளுநர் செயலகத்தை நோக்கி பேரணியாக சென்று அங்கு மகஜர் கையளித்தனர்.

போராட்டம் காரணமாக காலி நகருக்கு அருகாமையில் உள்ள பல வீதிகளில் கடும் வாகன நெரிசல் ஏற்பட்டது. (அ)



# ஜனாதிபதியை பதவி விலகக் கோரி மலையகத்தில் ஒப்பாரி போராட்டம்!

கொழும்பு, ஏப். 21

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தலைமையிலான அரசு பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும், பொருட்களின் தொடர் விலையேற்றத்தைக் கண்டித்தும் மலையக பெருந்தோட்டப்பகுதிகளில் நேற்று பல போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

சாலை மறியல் போராட்டம், ஒப்பாரி போராட்டம், பறை அடித்து முறையிடும் போராட்டம் என பல வடிவங்களில் போராட்டங்களை முன்னெடுத்து, தமது எதிர்ப்பை மக்கள் வெளிப்படுத்தினர்.

தமது கோரிக்கையை அரசு ஏற்காவிட்டால், போராட்டம் தீவிரம் அடையும் என எச்சரிக்கையும் விடுத்தனர். சில தோட்டங்களில் தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு செல்லாமல், தமது எதிர்ப்பை வெளியிட்டனர். மேலும் சில இடங்களில் 12 மணிக்கு பிறகு போராட்டங்கள் இடம்பெற்றன.

பத்தனை சந்தியில் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்தின் போது, தப்படித்து, ஒப்பாரி வைத்து, அரசு வீடு செல்ல வேண்டும் என கோஷம் எழுப்பட்டது.

நுவரெலியா மாவட்டத்தில் நுவரெலியா, ஹைபொரஸ்ட், இராகலை, உடபுஸ்ஸலாவை, நானுஓயா, டயகம, லிந்துலை நாகசேனை, ஹற்றன், கொட்டகலை, நோர்வூட், டிக்கோயா, நோட்டன்பிரிட்ஜ் ஒஸ்போன், மஸ்கெலியா, சாமிமலை அப்கட், பொகவந்தலாவை, கினிகத்தேனை, வட்டவளை, நல்லதண்ணி என மேலும் பல பகுதிகளில் போராட்டங்கள் இடம்பெற்றன. (அ)



# வங்கி ஊழியர் சங்கத்தினர் வவுனியாவில் ஆர்ப்பாட்டம்!

வவுனியா, ஏப். 21

வவுனியா பழைய பஸ் நிலையத்துக்கு அண்மையில் இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினர் ஆர்ப்பாட்டம் ஒன்றை நேற்று முன்னெடுத்தனர்.

அத்தியாவசிய பொருட்களின் விலை ஏற்றம்,தட்டுப்பாடு போன்றவற்றுக்கு எதிர்ப்பு தெரிவித்து இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது கருத்து தெரிவித்த அவர்கள்-

பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக இன்று அனைத்து மக்களும் கடும் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர். இதனால் வங்கி வலையமைப்புக்கும் பாதிப்பு ஏற்படும் அபாய நிலைமை காணப்படுகின்றது.

எனவே நாட்டையும், மக்களையும் படுகுழியில் தள்ளிய இந்த அரசு உடனடியாக பதவி விலகவேண்டும். இந்த நாட்டைக் கட்டி எழுப்ப வேண்டியது அனைவரது தலையாய கடமை. அதற்கு அனைத்து தரப்பினரும் ஒத்துழைக்கவேண்டும்-என்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் ஊழல்களால் உழைத்த பணத்தை மக்களின் உடைமையாக்கு,அரச நிறுவனங்களின் விற்பனையை நிறுத்து, வாழ்க்கைச் செலவை குறைத்திடு, வெளிநாட்டுப் பண கறுப்புச் சந்தை மாபியாவை தடை செய், விவசாயகளுக்கு நிவாரணம் வழங்கு போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர். (அ)

# மனிதப் படுகொலை செய்கிறது இந்த அரசு

## சஜித் சபையில் ஆவேசம்



**கொழும்பு, ஏப். 21**

**ரம்புக்கனையில் வீதிக்கு இறங்கிப் போராட்டத்தில் ஈடுபட்ட நபர்கள் பவுசருக்கு தீ வைக்க வந்தவர்கள் அல்லர் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

இதுவொரு மனிதர்களை படுகொலை செய்யும் அரசு எனவும் அவர் சாடினார்.

பாராளுமன்றில் உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த அரசாங்கம் போராட்டக்காரர்களை ஒடுக்க நினைகிறது. இதுவொரு மனிதர்களை படுகொலை செய்யும் அரசு.

இன்று ரம்புக்கனையில் கொடுத்த சமிக்ஞையானது நாடு முழுவதும் இடம்பெறும் போராட்டத்துக்கு அரசாங்கம் விடுத்துள்ள எச்சரிக்கையாகவே நாம் பார்க்கிறோம்.

பாதுகாப்புச் செயலாளர் உள்ளிட்ட பாதுகாப்புத் துறை அதிகாரிகள் அனைவரையும் அழைத்து ரம்புக்கனை விவகாரத்தை விசாரிக்கவேண்டும். ரம்புக்கனையில் போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள யார் அனுமதி வழங்கினார்கள்?

ரம்புக்கனை சம்பவத்தை முழுமையாக விசாரிக்குமாறு பொலிஸ்மா அதிபர் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார். ஆனால் இந்த விசாரணை மீது எங்களுக்கு நம்பிக்கை இல்லை. ஓய்வுபெற்ற நீதியரசர்களை கொண்டு முழுமையான விசாரணைக் குழுவொன்றை நியமிக்குமாறு நாங்கள் கேட்டுக்கொள்கிறோம். மிரிஹானையில் இடம்பெற்ற போராட்டத்தின் போது அங்கிருந்த பஸ் மீதும் அரசாங்கத்தின் ஆதரவாளர்களே தீ வைத்தனர்- என்றார். (அ)

# உரிமைக்காகப் போராடுபவர்களை சுட்டுக்கொல்வதே அரசின் நோக்கம்

## சாடுகின்றார் இராதாகிருஷ்ணன்

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் மக்களுக்காக குரல் கொடுத்த மக்களுக்காக போராடிய மக்களின் உரிமைகளுக்காக களத்தில் இறங்கிய இளைஞர்களை சுட்டுக்கொன்ற அரசாங்கத்தின் செயற்பாடுகளை வன்மையாக கண்டிப்பதோடு, அந்த குடும்பத்துக்கு மலையக மக்கள் சார்பாக ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கிறேன் என மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும், ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

ரம்புக்கனையில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் வே.இராதாகிருஷ்ணனின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள விசேட அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

ராஜபக்‌ஷ அரசாங்கம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வந்ததோ, அப்போதெல்லாம் உரிமைக்காக போராடியவர்களை சுட்டுக் கொண்டுயிருக்கிறார்கள். அன்று மண்ணெணெய் கேட்டு போராடிய மீனவர்களைச் சுட்டுக்கொன்றார்கள். ரத்துபஸ்வெல பகுதியில் தண்ணீர் கேட்டு போராடியவர்களை சுட்டுக் கொன்றார்கள். இன்று உரிமைக்காக போராடுகின்ற இளைஞர்களை சுட்டுக்கொன்றிருக்கிறார்கள்.



இந்த செயற்பாடானது. ஜனநாயகத்துக்கு எதிராக விடுக்கப்பட்டுள்ள பாரிய சவாலாகும். ஒரு ஜனநாயக நாட்டில் உரிமைக்காகவும், தங்களுடைய கருத்துகளை சுதந்திரமாக சொல்வதற்கும் அனைத்து பிரஜைகளுக்கும் உரிமை உண்டு. அந்தவகையில், அதனை இல்லாது செய்வதற்கு இந்த அரசாங்கம் முயற்சி செய்கின்றது.

இன்று இலங்கை இருக்கின்ற பொருளாதார நெருக்கடியில் சர்வதேச சமூகம் எம்மை உன்னிப்பாக பார்த்துக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் மனித உரிமை மீறல், யுத்த குற்றச்சாட்டுகள் என சர்வதேச மனித உரிமைகள் ஆணைக்குழு அரசுக்கு எதிராக விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றது.

ரம்புக்கனை சம்பவமானது இலங்கையில் மேலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றது - என்பதை சர்வதேசத்திற்கு உணர்த்துவதாக அமைந்துள்ளது. இது மேலும் எங்களுடைய பொருளாதாரத்தை பலவீனப்படுத்தும். சுற்றுலாத்துறை பாதிக்கப்படும். வெளிநாட்டு முதலீடுகள் இலங்கையில் முதலிடப்படமாட்டாது. வெளிநாடுகள் பொருளாதார ரீதியாக எங்களுக்கு உதவி செய்வதை மீண்டும் ஒரு முறை சிந்தித்து பார்க்கவேண்டிய சூழ்நிலை ஏற்படும்-என்றார். (அ)

# சனநடமாட்டம் குறைந்த வவுனியா நகரப் பகுதி

வவுனியா, ஏப். 21

நாட்டில் நேற்று தேசிய எதிர்ப்பு தினம் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் வவுனியா நகரில் சனநடமாட்டம் மிகவும் குறைவாகக் காணப்பட்டது.

நாட்டில் பொருட்களின் விலை ஏற்றத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு பகுதிகளிலும் போராட்டங்கள் இடம்பெற்றுவருகின்றன.

அந்தவகையில் நேற்று அரசுக்கு எதிர்ப்பை வெளியிடும் வகையில் தேசிய எதிர்ப்பு தினத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டதுடன் ஹர்த்தாலை அனுஷ்டிக்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டிருந்தது.

இதற்கு ஆதரவு தெரிவித்து வவுனியா செட்டிகுளம் உட்பட புறநகர் பகுதிகளில் வியாபார நிலையங்கள் மூடப்பட்டதுடன், பாடசாலைக்கு செல்லும் மாணவர்களின் வரவும் குறைவாக இருந்ததை அவதானிக்க முடிந்தது.

நேற்றுக் காலை முதல் நகரப் பகுதிக்கு செல்லும் பொதுமக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக காணப்பட்டிருந்ததை அவதானிக்க முடிந்தது. (அ)

# அமைச்சர் பதவியேற்ற நசீர் அஹமட்: போர்க்கொடி உயர்த்திய முஸ்லிம் காங்கிரஸ்

■ யூ.எல். மப்றூக்

இலங்கையில் அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களாக கடந்த திங்கட்கிழமை 17 பேர் பதவியேற்றுள்ள நிலையில், சுற்றுச் சூழல் அமைச்சுப் பொறுப்பேற்றுள்ள முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் என்பவருக்கு எதிராக அவரின் கட்சி போர்க்கொடி தூக்கியுள்ளது.



முஸ்லிம் காங்கிரஸுக்கு நாடாளுமன்றில் 5 உறுப்பினர்கள் உள்ளபோதும், அந்த கட்சியின் தலைவர் ரவூப் ஹக்கீம் மட்டுமே எதிர்கட்சி சார்பாக செயல்பட்டு வருகிறார். ஏனைய 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்தனர்.

கடந்த காலத்தில் அரசாங்கம் கொண்டு வந்த அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தம் மற்றும் வரவு - செலவுத் திட்டம் ஆகியவற்றை எதிர்த்து நாடாளுமன்றில் வாக்களிக்க வேண்டும் என முஸ்லிம் காங்கிரஸ் தீர்மானித்திருந்து. ஆனாலும் அந்தக் கட்சியின் தலைவர் தவிர ஏனைய 4 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஆதரவாகவே வாக்களித்தனர்.

இதனையடுத்து தமது 4 உறுப்பினர்களுக்கும் எதிராக ஒழுங்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என முஸ்லிம் காங்கிரஸ் அறிவித்தது. அந்த உறுப்பினர்கள் கட்சி அளவில் வகித்து வந்த பதவிகள் பறிக்கப்பட்டன. இதன் அடிப்படையில் முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் பதவியிலிருந்து நசீர் அஹமட் நீக்கப்பட்டார்.

இந்தப் பின்னணியில் தற்போது அரசாங்கத்துக்கு எதிராக பொதுமக்கள் பெருமெடுப்பில் போராட்டங்களை மேற்கொண்டு வரும் நிலையில், அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் சிலர், தமது அரசாங்க சார்பு நிலைப்பாட்டிலிருந்து பின்வாங்கியுள்ளனர்.

கட்சியின் தீர்மானங்களை மீறி அரசாங்கத்துக்கு ஆதரவளித்து வந்த முஸ்லிம் காங்கிரஸின் திருகோணமலை நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் இனி கட்சியின் தீர்மானத்தின் படி செயற்படவுள்ளதாக அறிவித்துள்ளார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களும் தற்போது அரசாங்கத்துக்கு தமது வெளிப்படையான ஆதரவை வழங்குவதிலிருந்தும் தவிர்ந்து வருகின்றனர். இவ்வாறான சூழ்நிலையிலேயே கேபினட் அந்தஸ்துள்ள அமைச்சர் பதவியை முஸ்லிம் காங்கிரஸின் நாடாளுமன்ற உறுப்பினர் நசீர் அஹமட் பதவியேற்றுள்ளார்.

## அவமானச் சின்னமாக மாறியுள்ளார்

இதனையடுத்து, "ஹாபிஸ் நஸீர் அஹமட் தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக் கொண்டுள்ளார்" என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்திருக்கிறார்.

முஸ்லிம் காங்கிரஸ் திங்கட்கிழமை விடுத்துள்ள அறிக்கையொன்றில் ஹக்கீம் இதனைக் கூறியுள்ளார்.

"முழு நாடும் ஆட்சியாளர்களை வீட்டுக்கு அனுப்புவதற்கு போராடிக்கொண்டிருக்கின்ற நிலையில், கட்சியின் கட்டுப்பாட்டை மீண்டுமொரு தடவை மீறிக் கொண்டு, அமைச்சுப் பதவியை பெற்றுக்கொண்ட நஸீர் அஹமட், தன்னை ஓர் அவமானச் சின்னமாக மாற்றிக்கொண்டுள்ளார்".

"ஏற்கனவே கட்சியின் கட்டுப்பாட்டை மீறியமைக்காக நஸீர் அஹமட் உட்பட 04 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கட்சியின் பதவிகளிலிருந்து நீக்கி, ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொண்டிருக்கும் நிலையில், அமைச்சர் பதவியை நசீர் அஹமட் பெற்றுக் கொண்டமையானது மிகவும் அசிங்கமானது" என முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸின் உச்ச பீடம் எதிர்வரும் வெள்ளிகிழமை (22) உத்தியோகபூர்வமாக ஒன்றுகூடி, நஸீர் அஹமட்டுக்கு எதிராக உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் எனவும் ரஊப் ஹக்கீம் குறிப்பிட்டுள்ளார்.

## யார் இந்த ஹாபிஸ் நசீர் அஹமட்

முஸ்லிம் காங்கிரஸின் மறைந்த ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப்புடன் நெருக்க மாக இருந்து, அந்தக் கட்சியின் முக்கிய நபராக செயற்பட்டு வந்தவர் ஹாபிஸ் நசீர் அஹமட்.

முஸ்லிம் காங்கிரஸின் தலைமைக் காரியாலயம் உள்ளிட்ட முக்கிய சொத்துக்களின் பொறுப்புதாரியாகவும் இவர் உள்ளார்.

கிழக்கு மாகாண சபையின் முதலமைச்சராக 2015 ஆம் ஆண்டு தொடக்கம் 2017ஆம் ஆண்டு வரையும் இவர் பதவி வகித்திருந்தார்.

இறுதியாக நடைபெற்ற பொதுத் தேர்தலில் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டமைத்து, பொதுச் சின்னத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்ட அதேவேளை, மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும், தனது சொந்தச் சின் னத்தில் முஸ்லிம் காங்கிரஸ் போட்டியிட்டது. அங்குதான் ஹாபிஸ் நசீரும் களமிறங்கினார்.



முஸ்லிம் காங்கிரஸுக்கு 05 நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளபோதும், அந்தக் கட்சியின் சொந்தச் சின்னத்தில் (மரம்) போட்டியிட்டு வெற்றிபெற்றவர் எனும் சிறப்பான அடையாளம் ஹாபிஸ் நசீருக்கு உள்ளது.

இதேவேளை அரசாங்கம் கொண்டு வந்த அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்துக்கு நாடாளுமன்றில் ஆதரவு வழங்குமாறு, நாடாளுமன்ற உறுப்பினர்களான தமக்கு - முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தான் கூறியதாகவும் ஹாபிஸ் நசீர் குறிப்பிட்டார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமுடைய வீட்டுக்கு 2020 ஒக்டோபர் 18ஆம் திகதி பசில் ராஜபக்ஷ வந்து ஹக்கீமுடன் பேசியதாகவும், அப்போது - தான் உட்பட முஸ்லிம் காங்கிரஸின் 04 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அங்கு இருந்ததாகவும் கூறிய ஹாபிஸ் நசீர் அஹமட் "அதன்போது முஸ்லிம் காங்கிரஸின் 04 நாடாளுமன்ற உறுப்பினர்களும் அரசியலமைப்புக்கான 20ஆவது திருத்தத்தை ஆதரித்து நாடாளுமன்றில் வாக்களிப்பார்கள்" என்று, பசீல் ராஜபக்ஷவிடம் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் வாக்குறுதி வழங்கியதாகவும் தெரிவித்தார்.



பசில் ராஜபக்ஷவுடனான அந்த சந்திப்பு பகல் 12.16 மணிக்கு ஆரம்பித்து 1.15 வரைக்கும் நடந்ததாகவும் ஹாபிஸ் நசீர் குறிப்பிட்டார்.

"அரசியலமைப்பின் 20ஆவது திருத்தம் தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு நாடாளுமன்றில் நான் உரையாற்றிய போது, எமது கட்சித் தலைவர் மனச்சாட்சிக்கு அமைவாக வாக்களிக்குமாறு எங்களுக்குக் கூறியுள்ளார் என கூறினேன். அதனை தலைவர் ஹக்கீம் கேட்டுக் கொண்டிருந்தார். நான் கூறியது பொய் என்றால், அவர் என்னை இடைமறித்து, "நீங்கள் 20ஆவது திருத்தத்தை எதிர்த்து வாக்களிக்க வேண்டும" எனக் கூறியிருக்கலாமல்லவா? ஆனால் அவர் அதனைச் செய்யவில்லை. காரணம், அவரின் உத்தரவுக்கு அமைவாகத்தான் அன்று 20ஆவது திருத்தத்துக்கு ஆதரவாக நாம் வாக்களித்தோம்" எனவும் அவர் தெரிவித்தார்.

இவ்வாறு தம்மை அரசாங்கத்தின் பக்கம் செல்லுமாறு கூறிவிட்டு, இப் போது முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் தன்னை குற்றப்படுத்திக் கூறுவது - எந்தவகையில் நியாயம் எனவும் ஹாபிஸ் நசீர் கேள்வியெழுப்பினார்.

## விதியை மீறிய இருவர்

முஸ்லிம் காங்கிரஸின் தற்போதைய தலைவர் ரவூப் ஹக்கீம், பல்வேறு தடவை அரசாங்கங்கள் ஆட்சியமைப்பதற்கு ஆதரவளித்துள்ளதோடு, தமது கட்சி சார்பில் அமைச்சர் பதவிகளையும் பெற்றிருந்தார். அதன்போது அமைச்சரவை அந்தஷ்துள்ள அமைச்சர் பதவிகளை தனக்கு மட்டுமே அவர் பெற்றிருந்தார்.

முஸ்லிம் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரப் 2000ஆம் ஆண்டு ஹெலிகொப்டர் விபத் தொன்றில் மரணமடைந் தமையினை அடுத்து, அந்தக் கட்சியின் தலைமைப் பதவியை ரவூப் ஹக்கீம் பெற்றுக் கொண்டார்.

அவர் முஸ்லிம் காங்கிரஸின் தலைவராகப் பதவி வகித்துள்ள 22 வருட காலத்திலும், பல்வேறு தடவை பல அரசாங்கங்களில் முஸ்லிம் காங்கிரஸ் பங்காளிக் கட்சியாக இருந்துள்ளதோடு, ரவூப் ஹக்கீமும் கேபி னட் அமைச்சராகவும் பதவி வகித்துள்ளார்.

இந்த சந்தப்பங்களில் கட்சியின் ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, பிரதியமைச்சர் மற்றும் அமைச்சரவை அந்தஷ்தற்ற அமைச்சர் பதவிகளையே ஹக்கீம் பெற்றுக் கொடுத்துள்ளார்.

அந்த வகையில், முஸ்லிம் காங்கிரஸ் கட்சியில், அதன் தலைவர் மட்டுமே அமைச்சரவை அந்தஷ்துள்ள அமைச்சராக பதவி வகிக்க வேண்டும் என்கிற "எழுதப்படாத ஒரு விதி" இருந்து வந்தது. இந்த விதியை முஸ்லிம் காங்கிரஸின் தவிசாளராகப் பதவி வகித்த பசீர் சேகுதாவூத் மீறி, மஹிந்த ராஜபக்ஷ கடைசியாக ஜனாதிபதியாக இருந்தபோது, ஹக்கீமுக்குத் தெரியாமல் அமைச்சரவை அந்தஷ்துள்ள அமைச்சர் பதவியை பெற்றுக் கொண்டார்.

இந்த நிகழ்வே, முஸ்லிம் காங்கிரஸ் தலைவருக்கும் அந்தக் கட்சியின் அப்போதைய தவிசாளருக்கும் இடையில் இருந்து வந்த முறுகல் நிலை, பெரும் போராக மாறுவதற்குக் காரணமாக அமைந்தது. இதன் பின்னர் பசீர் சேகுதாவூத் கட்சியிலிருந்தே விலகிச் செல்ல நேரிட்டது.

இப்போது முஸ்லிம் காங்கிரஸின் மற்றொரு நாடாளுமன்ற உறுப்பினரான ஹாபிஸ் நசீர் அஹமட், தனது கட்சித் தலைவருடைய "எழுதப்படாத விதி"யை மீறி, அமைச்சரவை அந்தஷ்துள்ள அமைச்சர் பதவியொன்றைப் பெற்றுள்ளார்.

இனி, முஸ்லிம் காங்கிரஸுக்குள் அவரின் அரசியல் எதிர்காலம் எப்படியிருக்கும் என்பதை, எதிர்வரும் 22ஆம் திகதி கட்சியின் உயர்பீடம் எடுக்கும் தீர்மானத்தின் பின்னர்தான் அறிய முடியும். [பிபிசி]

ஈழநாடு






# வீட்டுக்குப் போ!

## தோல்வியடைந்த ஜனாதிபதி வீட்டுக்கு செல்வாரா?

■ சந்தன சிறிமல்வத்த

"கோட்டா வீட்டுக்குப் போ" என்ற பிரபலமான முழக்கம் ஒரே இரவில் தோன்றியதல்ல. 27 மாதங்களாக அவர் அரச தலைவராக இருந்து நாட்டு மக்களிற்கு செய்ய வேண்டியதை செயய் தவறியதற்கு எதிரான பொதுமக்கள் குரல் தான் இது.

ஆனால் கோட்டாபய தனது இயலாமையை அங்கீகரித்து ஜனாதிபதி பதவியில் இருந்து விலகுவாரா? 2019ஆம் ஆண்டு ஜனாதிபதி வேட்பாளர் கோட்டாபய ராஜபக்ஷ, வழக்குகளுக்கு பொய் காரணங்களை கூறிய தன் மூலம் நீதிமன்றத்தில் ஆஜராகாமல் தப்பித்தவர். அவர் ஒரு "தேசபக்தர்களின் தேசபக்தர்" அவர் ஜனாதிபதிக்கான வேட்புமனுவை அவரது சகோதரர் மஹிந்த அங்கீகரிக்கும் வரை அமெரிக்க குடியுரிமையை கைவிடுவதற்கு விண்ணப்பிக்கவில்லை. 2019 ஆம் ஆண்டுக்கு முன்னர், குறிப்பாக அவர் பாதுகாப்பு அமைச்சின் செயலாளராக கடமையாற்றிய கோட்டாபயவின் வரலாற்றை தீவு தேசம் நன்கு அறிந்திருக்கிறது.

எவ்வாறாயினும், கோட்டா அவ்வளவு எளிதாகவோ அல்லது இலகுவாகவோ அதிகாரத்தை துறந்துவிடுவார் என்பது சாத்தியமில்லை. ஆனால், நேர்மறையாகச் சிந்திக்க, அரசியல் அரங்கில் இருந்தும் இராஜதந்திர வட்டாரங்களில் இருந்தும் அழுத்தம் அதிகரித்து வருவதால் கோட்டா கோரிக்கைக்கு செவிசாய்க்கிறார் என்று வைத்துக்கொள்வோம்.

### மாற்றுத் தீர்வுகள் மாற்று வழிகளா?

இந்த நாட்டின் அரசியல் அரங்கில் கோட்டாபயவுக்குப் பதிலாக நாம் அறியாத ஒரு தலைவரை நியமிக்க முடியுமா? இந்த நாட்டின் அரசியல் அதிகாரத்தில், நாம் அறியாத, அரசியலின் சொம்புப் பரீட்சைக்கு உட்படுத்தப்படாத ஓர் அந்நியனுக்கு இடமில்லை. அப்படியானால், கோட்டாவுக்கு எதிரான போராட்டங்களில் விளைந்துள்ள இந்த பொருளாதார, அரசியல், சமூக நெருக்கடியை புரட்டிப் போட்டு நம்மைக் காப்பாற்றும் இத்தகைய அரசியல் தலைவரின் சாத்தியம் என்ன? கோட்டாபய-மஹிந்த ஜோடியை மாற்றுவது டொலர் சம்பாதிப்பதற்கான ஒரு வழியாக முடியுமா? நாட்டின் பொருளாதாரத்தில் தற்போதைய கடன் நெருக்கடியை எப்படி சமாளிக்க முடியும்? சிறந்த இராஜதந்திர உறவுகளைக் கொண்ட ஒருவர் கடனை மறுசீரமைக்க முடிந்தாலும், நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்க முடியுமா அல்லது பொருளாதார சூனியத்தைக் காட்ட முடியுமா? இந்தக் கேள்விகள் எங்களிடம் உள்ளன. அவ்வாறான பொறுப்பை ஏற்கத் தயாரில்லை என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஏற்கனவே தெரிவித்துள்ளார். எதிர்க்கட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தற்போது சர்வகட்சி கூட்டத்தில் கலந்து கொண்டுள்ளார். ஐ. எம். எவ்வுக்கு சென்று அதே பழைய தீர்வை பின்பற்ற தயாராகி வருகிறார். ரணிலைப் போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் சர்வகட்சி மாநாட்டில் அமர்ந்து இந்தியச் செல்வாக்கினால் அரசாங்கத்துடன் நின்றது. எதிர்க்கட்சியின் அடுத்த முன்னணியாக தேசிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஹரினி அமரசூரிய, இந்த நெருக்கடிக்கு மைத்திரியால் விரைவான தீர்வு கிடைக்காது என்றும் கூறியுள்ளார்.

யார் ஆட்சிக்கு வந்தாலும், இந்த நாட்டில் நீண்ட காலமாக அமுல்படுத்தப்பட்ட வக்கிரக் கொள்கைகளால் மோசமடைந்துள்ள இந்த நெருக்கடியை எவராலும் எளிதாகவும் விரைவாகவும் தீர்க்க முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துப்படி, இடைக்கால அரசாங்கத்தின் கீழ் மேலும் கடன் பெற்று வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதன் மூலம் பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதே தீர்வு. இது எளிதான காரியம் அல்ல என்பதை நாம் அனைவரும் அறிவோம். பொருளாதாரத்தில் தேசத்தின் பங்கை மேலும் குறைத்து, தனியார் தொழில்முனைவோர் மற்றும் பெரிய அளவிலான வெளிநாட்டு நிறுவனங்களிடம் ஒப்படைக்க நேரம் எடுக்கும். கடந்த 43 ஆண்டுகளாக நாட்டின் பொருளாதாரம் இந்தப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது. எண்ணெய் வரிசைகள் மற்றும் எரிவாயு வரிசைகள் உட்பட வரலாறு காணாத பொருளாதார நெருக்கடிகளுடன் இன்று நாம் கண்டுவரும் அராஜக சகாப்தம் அதன் முடிவு.

### நெருக்கடி இன்னும் மோசமாகி வருகிறது, தீர்வுக்கு வழி இல்லை

அப்படியென்றால் எஞ்சிய சில வருடங்கள் கோட்டாபய ஆட்சியில் இருக்க வேண்டுமா? இல்லை, கோட்டா-மஹிந்த ஆட்சி இந்த நாட்டில் கொண்டு வரும் அழிவுகளை விரைவில் நிறுத்த வேண்டும். அவர்கள் ஏற்படுத்திய அழிவுகளுக்கு முடிவு கட்ட வேண்டும். மேலும் அவர்கள் தங்கள் கையாட்களை வைத்து கொள்ளையடித்த நாட்டின் செல்வத்தை மீட்க வழி இருக்க வேண்டும். ஆனால் இந்த வெகுஜனப் போராட்டத்தால் அப்படி ஒரு மாற்றத்தை ஏற்படுத்த முடியுமா?

### அரசாங்கத்தின் தந்திரோபாய பின்வாங்கல்

கோட்டாபய, மஹிந்த ராஜபக்ச உள்ளிட்ட தற்போதைய ஆளும் குழுவின் எதிர்வினைகளின்படி, எதிர்ப்புகளை அடக்குவதற்கு அவர்கள் அவசரப்படவில்லை. ஒரு சில சம்பவங்களைத் தவிர, மக்கள் சுதந்திரமாக போராட்டம் நடத்தி வருகின்றனர். அரசாங்கத்தின் தந்திரோபாய நோக்கம் இந்த வெகுஜனப் போராட்டத்தை நீடிப்பதும், வெகுஜனங்களை சோர்வடையச் செய்வதும், மக்கள் எதிர்ப்பு இயக்கங்களை சீர்குலைத்து காணாமல் போவதும் ஆகும். சில வெளிநாட்டு உதவிகளை பெற்று மக்களுக்கு நிவாரணம் வழங்குவதன் மூலம் மீண்டும் அதிகாரத்தை நிலைநாட்டுவதே ஆட்சியாளர்களின் நோக்கமாகும். மக்கள் விருப்பம் இல்லாவிட்டாலும், வெகுஜனப் போராட்டங்கள் நீண்டு, திசை தெரியாமல் இழுத்தடிக்கப்பட்டால்; அது நடக்கலாம். அதே வகையில், பொலிஸ் அல்லது ஏனைய அடக்குமுறை ஆயுதப் படைகளால் நசுக்கப்பட்ட இந்த மக்கள் எழுச்சியானது, கோட்டா-மஹிந்த ஆட்சியை இனியும் நிலை நிறுத்த முடியாத நிலையை அடைந்தால், இது நடக்காது.

ஆனால் இந்த கிளர்ச்சி செய்யும் மக்களை விட ஆளும் கட்சி அரசியல் ரீதியான குணம் கொண்டது. மக்களின் நடத்தை போர்க்குணத்திலிருந்து விரக்தியிலிருந்து திரவ நிலைக்கு மாறும் என்பதை அவர்கள் அறிவார்கள். ஆனால், இந்தப் போராட்டத்தில் கவனம் செலுத்தி போராட்டத்தைக் கூர்மைப்படுத்துவது வெகுஜனப் போராட்டத்தின் முன்னோடிகளின் பொறுப்பாகும். பதிலாக, குறுக்குவழியாக பாராளுமன்றத்தில் அதிகாரத்திற்கு வருவதை நோக்கமாகக் கொண்ட குறிப்பிட்ட சக்திகள் அத்தகைய நடவடிக்கையை எடுக்கும். இவ்வாறானதொரு தருணத்தில் மக்களின் கோரிக்கையை பொருட்படுத்தாமல் இந்தப் போராட்டம் முடிவுக்கு வந்தால் இன்னும் சில வருடங்களுக்குப் பிறகு அதே புதிய அரசாங்கத்திற்கு எதிராக மக்கள் வீதியில் இறங்க வேண்டிய நிலை ஏற்படும்.

இந்த உண்மையான போர்க்குணம் மற்றும் மகத்தான மனித முயற்சி மற்றும் அபிலாஷைகளால் கோரப்படும் தீர்வுகளுக்கு வெற்றிகரமான பங்களிப்பை வழங்க நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் இயக்கம் இந்தப் போராட்டத்தை வழிநடத்த வேண்டும். அது ஒரு மக்கள் சக்தியாக இருக்க வேண்டும், அது தள்ளிப் போடுதல் மற்றும் தோல்விக்கு முகங் கொடுக்கும் போது தளர்வாக உடைந்து சிதறாது. அதை எப்படி செய்வது என்பது ஒரு முக்கியமான கேள்வி.

### வெகுஜனப் போராட்டங்களின் வரலாற்றிலிருந்து பாடங்கள்

வெகுஜனப் போராட்டங்களில் கூட்டு வெற்றிகளைப் பெற்ற பல சந்தர்ப்பங்கள் உண்டு. இது போன்ற பல சாதனைகள் பல்வேறு நாடுகளில் சமூகத்தில் நேர்மறையான மாற்றத்தைக் கொண்டு வந்துள்ளன. **PODEMOS** அல்லது **ZYRISA** போன்ற சமீபத்திய ஐரோப்பிய நாடுகளில் எழுச்சிகள் மற்றும் "அரபு வசந்தம்" போன்ற அனுபவங்கள், பரவலான எதிர்ப்பு வெறும் அதிகார மாற்றத்துடன் முடிவுக்கு வந்துள்ளது. மக்கள் சக்தியை நிறுவி இறுதியில் மக்கள் எழுச்சிக்கு வழிவகுத்த சூழ்நிலைகளை மாற்றுவதன் மூலம் அல்ல. போராட்டங்களில் கலந்து கொள்வதற்காக வீதியில் இறங்கிய ஆர்வமும், போர்க்குணமும் கொண்ட மக்கள் கல்வியறிவு மற்றும் அதிகாரம் பெறுவது அவசியம். வெறும் தூண்டுதலால் போராட்டம் நடத்த மக்களை அனுமதிக்காமல், கல்வி மற்றும் தலைமைத்துவத்தின் மூலம் அரசியல் ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட சக்தியாக மாற்றுவதற்கு இந்த மக்கள் போர்க்குணத்தை ஒழுங்கமைக்க வேண்டிய அவசரத் தேவை உள்ளது. அவர்களின் ஒப்புதல் மற்றும் செயலில் பங்கேற்புடன் முறைகளை வகுத்து, மக்கள் அதிகாரத்தை வைத்திருக்கும் வலுவான நிறுவன கட்டமைப்பை உருவாக்குவதன் மூலம் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

இந்தப் போராட்டங்களின் போது முன்மொழியப்பட்ட அமைப்புக் கட்டமைப்புகளை மக்கள் சக்தியைக் கொண்டு சோதிக்க வேண்டும். பெரும்பான்மையான மக்கள் கூட, "கோட்டா வீட்டுக்குப் போ! ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்த எவரும் மக்களிடம் அதிகாரத்தை ஒப்படைத்துவிட்டு வரலாற்றில் தங்களுக்கு உரிய இடத்தில் இறங்க மாட்டார்கள். மக்களின் கோரிக்கையின் காரணமாக, கோட்டாபய, மஹிந்த ராஜ பக்ஷ, அமைச்சர்கள் மற்றும் தற்போதைய அரசாங்கத்தின் உடந்தைகள் தற் போது அனுபவிக்கும் அரசியல் அதிகா ரம் மற்றும் சலுகைகளை விட்டுக் கொடுக்க மாட்டார்கள். ஆனால், அந்த அதிகாரத்தை கைவிட்டு கோட்டாபய - மஹிந்த உள்ளிட்ட மக்கள் துரோகிகள் வீட்டுக்குப் போகட்டும் என்று மக்கள் போராட்டத்தின் கோஷங்கள் முழங்கு வதில்லை. இந்த நிலைக்கு நாட்டை இழுத்துச் சென்ற ஆட்சியாளர்களின் அபரிமிதமான செல்வத்தை மீட்க வேண்டும் என்ற புதிய முழக் கத்தால் எதிர்ப்புகள் சேர்ந்துள்ளன.

அத்தகைய சூழ்நிலையில் ராஜபக்ஷவால், ரணில் மற்றும் மத்திய வங்கிக் கொள்ளைக் கும்பலைப் பாதுகாத்ததைப் போலவே, ராஜபக்ஷ குழுவும் அதன் போட்டி ஆளும் குழுவால் பாதுகாக்கப்படும். ஏற்கனவே ரணில் விக்கிரமசிங்க ஆற்றிய பாத்திரத்தைப் போன்றே எதிர்க்கட்சி அரசியல் சக்திகளும் ஆளும் கட்சிக்கு உதவுவார்கள். ஆளும் வர்க்கத்தைப் பாதுகாப்பதிலும் எதிர்ப்புத் தெரிவிக்கும் மக்களின் அதிகாரத்தை எதிர்கொள்வதிலும் ரணில் விக்கிரமசிங்கவின் ஈடுபாட்டை நாம் கவனமாக ஆராய வேண்டும். ஆளும் வர்க்கத்தை காப்பாற்ற முதலாளித்துவ அரசின் இயந்திரத்தை பாதுகாக்க அவர் எப்போதும் இருக்கிறார்.

2014ஆம் ஆண்டு மஹிந்தவின் தோல்வியின் பின்னர், ரணில் விக்கிரமசிங்க, அவருக்கு வீட்டுக்குச் செல்வதற்கு பாதுகாப்புப் படையினரின் ஹெலிகொப்டரை வழங்க நடவடிக்கை எடுத்திருந்தார். தற்போது மக்கள் போராட்டத்தின் முன் பலவீனமாக இருக்கும் அதிகார வர்க்கத்தின் பாதுகாப்பு குறித்து கருத்தை வெளியிட்டுள்ளார்.

### வீட்டுக்குப் போ! - எதிர்ப்புக்கு அப்பால்

எனவேதான் எதிர்ப்பு அரசியல் அதன் வரம்பைத் தாண்டிச் செல்ல வேண்டும், கோட்டா கோ ஹோம்! மக்கள் அதிகாரத்துடன் ஆளும் வர்க்கம் விளையாடுவதைத் தடுக்க, ராஜபக்ச எதிர்ப்பு என்று சொல்லப்படும் அமைப்பிலிருந்து அரசியல் அமைப்பு வரை மக்கள் அணிதிரள வேண்டும். நீண்ட கால அடிப்படையில் மக்களின் நிறுவனத் திறனைப் பேணுவது சவாலாக இருந்தாலும், தற்போதைய போராட்டங்களின் நோக்கங்களைப் பாதுகாக்க வேறு வழியில்லை. போராட்டத்தில் உண்மையான வெற்றிகளைப் பெறுவதற்கான ஒரே வழி அதுதான்.

இத்தகைய ஒழுங்கமைக்கப்பட்ட அதிகார அமைப்புகளை உருவாக்குவதற்கான செல்லுபடியாக்கத்திற்கும் விவாதத்திற்கும் மக்கள் போராட்டத்தின் தொடர்ச்சி இருக்க வேண்டும். மக்களின் மக்கள் போராட்ட இயக்கங்களின் திசையை தீர்மானிக்க வேண்டியது அவசரம். இறுதியாக, அறிஞர்கள், கலைஞர்கள், சிவில் சமூக ஆர்வலர்கள் மற்றும் அரசியல் பார்வை கொண்ட இடதுசாரிகள் மக்கள் போராட்டத்தில் கலந்துகொண்டு, தோள்களைத் துலக்கி, தேவையான விமர்சனங்களைச் செய்வது இன்றியமையாதது.

இளைஞர் கூறுகள், இடதுசாரிகள் மற்றும் போராட்ட இயக்கத்தின் பொது உறுப்பினர்கள் உண்மையான இறுதி வெற்றியாக இல்லாவிட்டாலும், தகுதியான மாற்றங்களைச் செய்யும் வரை போராட்டத்தைத் தொடர வேண்டும் என்ற நோக்கத்தைக் கொண்டிருக்க வேண்டியது தலையானது.



# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை வினாத்தாள்

கல்வி tv CHANNEL

36) பானங்கள் தயாரிக்கப் பயன்படும் வேர் எது?
1) வில்வம் வேர் 2) சாத்தாவாரி வேர் 3) வெட்டி வேர்

37) நிலத்தில் குப்பைகளை எரிப்பதால் இறக்கும் உயிரினம் எது?
1) மண்புழு 2) பறவைகள் 3) மீன்

38) தச்சன் பயன்படுத்தும் உபகரணங்களில் ஒன்று
1)  2)  3) 

39) கைக்குட்டையில் பூ, பூக்காம்பு என்பவற்றைத் தைப்பதற்குப் பயன்படும் தையல்
1) கம்பளித் தையல் 2) சங்கிலித் தையல் 3) அடிப்படைத் தையல்


40) இலங்கைக்கே உரித்தான பறவையாக அமையாதது?
1) காட்டுக்கோழி 2) சபன் கோழி 3) பச்சைக்கிளி

41) அயடீன் குறைபாட்டால் ஏற்படும் நோய்
1) ஸ்கேவி 2) குருதிச்சோகை 3) தொண்டைக்கழலை

42) பின்வருவனவற்றில் பாதுகாப்பற்ற சந்தர்ப்பம் எது?
1) கூரிய உபகரணங்களைக் கையில் ஏந்தியவாறு ஓடுதல்
2) பாதையின் வலது பக்கத்தால் செல்லுதல்
3) முகக் கவசம் அணிந்து செல்லுதல்

43) கொப்பளிப்பான் நோயின் நோய்க்காவிகள்
1) நுளம்பு 2) அசுத்தமான உணவு 3) ஆட்கள்

44) எண்ணெய், கொழுப்பு அடங்கியுள்ள உணவுகளை அதிகம் உண்ணுவதால் ஏற்படும் நோய்
1) நீரிழிவு 2) சீதபேதி 3) இதய நோய்

45) 


படத்தில் காட்டியவாறு நீரைச் சூடாக்கும் போது உடனடிய நிகழ்வது
1) நீர் ஆவியாகும் 2) நீர் சூடாகும் 3) நீர் குறையும்

46) நீராவி மூலம் பெறத்தக்க பயன் எது?
1) நீரைக் குளிரச் செய்தல் 2) சோறு சமைத்தல் 3) மூலிகை அவித்தல்

47) மாசடைந்த நீரை நுகர்வதால் ஏற்படும் நோய் எது?
1) டெங்கு 2) ஈரலழற்சி 3) சின்னமுத்து

48) சேதனப் பசளையாகப் பயன்படுத்துவது
1) யூரியா 2) மாட்டெரு 3) அமோனியா

49) எனது பாடசாலை காலியில் அமைந்துள்ளது. எனது பாடசாலை அமைந்துள்ள மாகாணம் எது?
1) வடமாகாணம் 2) கிழக்கு மாகாணம் 3) தென் மாகாணம்

50) காந்தம் கவர முடியாத பொருள் எது?
1) குண்டூசி 2) நெகிழி 3) இரும்பாணி

51) பற்சில்லுகளைக் கொண்ட உபகரணம்
1) ஒற்றைச்சில்லு வண்டி 2) மின்விசிறி 3) துவிச்சக்கரவண்டி

52) தொடர்பாடலுக்குப் பயன்படும் பிரசித்தி பெற்ற அச்சு ஊடகம்
1) வானொலி 2) இணையம் 3) பத்திரிகை

53) மின்னஞ்சல் அனுப்புவதற்குத் தேவையான சாதனம் அல்லாதது
1) கணினி 2) மடிக்கணினி 3) வானொலி

54) சிகிரியா அமைந்துள்ள மாவட்டம் எது?
1) கண்டி 2) அநுராதபுரம் 3) மாத்தளை

55) பௌத்த நூல்களை பாளி மொழியிலிருந்து ஆங்கிலத்திற்கு மொழி பெயர்த்தவர்
1) வண.எஸ்.மஹிந்த 2) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி 3) C.W.W.கன்னங்கரா

56) காற்பந்து விளையாட்டுப் போட்டியில் ஓர் அணியில் பங்குபற்றும் வீரர்களின் எண்ணிக்கை யாது?
1) 10 பேர் 2) 7 பேர் 3) 11 பேர்

57) கடதாசிகளை மடித்து உருவங்கள் அமைத்தலை எவ்வாறு அழைப்பர்?
1) கொலாஜ் 2) ஓரிகாமி 3) அலப்பறை

58) உடலுக்குச் சக்தி தரும் உணவு
1) பருப்பு 2) பாண் 3) வல்லாரை

59) குறைவான நீர் அருந்துவதால் ஏற்படும் அசௌகரியம் அல்லாதது
1) சிறுநீரின் நிறம் கடும் நிறமாதல்
2) தோல் உலர்தல்
3) சிறுநீரகங்கள் ஆரோக்கியமாதல்

(30 புள்ளிகள்)

60) பாடசாலை விடுமுறைக் காலத்தில் நான் சென்ற கல்விச் சுற்றுலா என்ற தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

## விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 36. | 3 | 37. | 1 | 38. | 1 |
| 39. | 2 | 40. | 3 | 41. | 3 |
| 42. | 1 | 43. | 3 | 44. | 3 |
| 45. | 2 | 46. | 3 | 47. | 2 |
| 48. | 2 | 49. | 3 | 50. | 2 |
| 51. | 3 | 52. | 3 | 53. | 3 |
| 54. | 3 | 55. | 2 | 56. | 3 |
| 57. | 2 | 58. | 2 | 59. | 3 |

60. பொருத்தமான வாக்கியங்கள்


கல்வி tv CHANNEL-1

**21.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் மறு ஒளிபரப்பு | மறுஒளிபரப்பு மறு ஒளிபரப்பு அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**21.04.2022**
**வியாழக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

# அரசாங்கத்துக்கு எதிராக மீனவர்கள் ஆர்ப்பாட்டம்!



திருமலை, ஏப். 21

திருகோணமலை மணிக் கூண்டு கோபுரத்துக்கு அருகில் ஒன்றுகூடிய மீனவர்கள் எரிபொருள் தட்டுப்பாடு மற்றும் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்று புதன்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தொடர்ச்சியான எரிபொருள் விலையேற்றம் காரணமாக தாம் மிகுந்த பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக தெரிவித்த மீனவர்கள், இந்த அரசு பதவி விலகவேண்டும் என வலியுறுத்தி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மீன்பிடிக்க செல்வதற்கு எரிபொருள் தட்டுப்பாடாக உள்ளதாக தெரிவித்த அவர்கள், பிடித்துவரும் மீன்களைச் சந்தைப்படுத்துவதிலும் சிக்கல் நிலை நிலவி வருவதன் காரணமாக தாம் தமது உயிரை மாய்த்துக் கொள்ள வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாகவும் கூறினர். (அ)

# எரிபொருள் விநியோகத்துக்கு திருக்கோவிலில் அட்டவணை

திருக்கோவில், ஏப். 21

அம்பாறை - திருக்கோவில் பிரதேச செயலகத்தில் இயங்கி வரும் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் எரிபொருள் விநியோக நிலையத்தில் பொது மக்களின் கூட்டத்தை கட்டுப்படுத்தி எரிபொருளை முறையாக விநியோகிக்க நேர அட்டவணை ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

திருக்கோவில் பிரதேசத்தில் காணப்படும் எரிபொருள் விநியோகப் பிரச்னைக்கு தீர்வு காணும் வகையில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்ற பிரதேச அரச திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போதே மேற்படி தீர்மானம் எடுக்கப்பட்டு இருந்தன.

இதன்போது விவசாயிகளின் மோட்டார் சைக்கிள்களுக்கு அதிகாலை 4மணி முதல் 6 மணிவரையும் அரச உத்தியோகத்தர்களின் வாகனங்களுக்கு காலை 6முதல் 9 மணிவரையும் உழவு இயந்திரம் மற்றும் டீசல் வாகனங்களுக்கு 9 மணிமுதல் நண்பகல் 1.30 மணி வரையும் மண்ணெண் ணெய் பிற்பகல் 2.30 மணி முதல் 4 மணிவரையும் முச்சக் கரவண்டிகள் மற்றும் பொது மக்களின் வாகனங்களுக்கு மாலை 4 மணி முதல் இரவு 8 மணி வரையும் என்ற நேர ஒழுங்கில் எரிபொருளை விநியோகிக்க முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இக் கூட்டத்தில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ. கஜேந்திரன் தவிசாளர் இ. வி. கமலராஜன் உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன் திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் வைத்திய அத்தியட்சகர் எனப் பலர் கலந்து கொண்டனர். (ஐ)

# நஸீர் அஹமட் ஒழிக!

## ஏறாவூரில் மக்கள் போராட்டம்

அம்பாறை,ஏப்.21

**ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஹாபீஸ் நஸீர் அஹமட் அமைச்சுப் பொறுப்பை ஏற்றமைக்கு எதிராக அவரது சொந்த ஊரில் மக்கள் நேற்று முன் தினம் இரவு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

அமைச்சரின் உருவப்படம் தாங்கிய பதாகைக்கு நாணயத் தாள்களின் மாலை இடப்பட்டு பெட்டி ஒன்றின் மீது வைத்து வீதியில் வலம் வந்து 'நஸீர் அஹமட் ஒழிக' என கோஷமிட்டு அதனை எரித்துள்ளனர்.

நாட்டு மக்கள் தற்போது எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் தற்போதைய அரசில் அமைச்சுப் பொறுப்பை ஹாபீஸ் நஸீர் அஹமட் ஏற்றுக் கொண்டிருக்கக்கூடாது என இதன்போது மக்கள் தெரிவித்தனர். (அ)



# திருகோணமலையில் கோர விபத்தில் சிறுவன் உயிரிழப்பு! 7 பேர் படுகாயம்!!

திருமலை, ஏப். 21

திருகோணமலை-நொச்சிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை இடம்பெற்ற வாகன விபத்தில் சிறுவன் ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், 7 பேர் காயமடைந்துள்ளனர்.

வான் ஒன்றும் லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதிக்கொண்டதனாலேயே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இதன்போது காயமடைந்தவர்கள் சிகிச்சைகளுக்காக வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்து குறித்து வழக்கு பதிவு செய்துள்ள பொலிஸார், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# தமிழருக்காக குரல் கொடுக்கவிடினும் சிங்களவருக்காகக் குரல் கொடுப்போம்!

## சாணக்கியன் எம். பி. சொல்கிறார்

கொழும்பு, ஏப். 21

தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது சிங்கள மக்கள் குரல் கொடுக்காதபோதும் ரம்புக்கனையில் குடிமகன் ஒருவர் கொல்லப்பட்ட சம்பவத்தில் தமிழர்களும் சிங்கள மக்களுடன் இணைந்துள்ளனர் - அவர்களுக்காக போராடுவர்.

இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் கூறுகையில், வடக்கு, கிழக்கில் காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடி, தாய்மார் ஆயிரத்து ஐநூறு நாட்களாக தொடர்ந்தும் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். எனினும், அதற்கு ஆதரவு வழங்கவில்லை என்பதால் தற்போதைய போராட்டங்களுக்கு தமிழர்கள் ஆதரவளிக்காமல் இருக்கப்போவதில்லை.

இந்த சம்பவங்களின்போது சிங்கள மக்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டிருந்தால் தமிழர்களுக்கு பிரச்னைகள் ஏற்பட்டிருக்காது. இந்த அரசாங்கம் தமக்கு வாய்ப்பானவர்களுக்கு பொது மன்னிப்பு மற்றும் விடுதலை பெற்றுக்கொடுத்துள்ளது.

எனவே இதுவரை கோட்டாபய ராஜபக்ஷவுடன் இதற்காக இணைந்திருந்தவர்கள் இனியாவது விலகிச்செல்லவேண்டும். வடக்கு, கிழக்கில் இன்றும் மக்கள் பிரச்னைகளுக்கு உட்பட்டுள்ளனர். பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் இன்றும் வடக்கு, கிழக்கில் இளைஞர்கள் கைதுசெய்யப்படுகின்றனர் என்றும் சாணக்கியன் கூறினார். (ஐ)

# திருமலையில் பல பகுதிகளிலும் உக்கிரமடைகிறது போராட்டம்!

## பல வீதிகள் இடைமறிப்பு







திருமலை, ஏப். 21

திருகோணமலையில் நேற்று முன் தினம் மாலையிலிருந்து பொதுமக்கள் வீதியை மறித்து, ரயர்களை எரித்து அரசாங்கத்துக்கெதிரான ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த போராட்டம் நேற்றும் தொடர்ந்தது.

இதன் காரணமாக திருகோணமலை - கண்டி பிரதான வீதியான அபயபுர சுற்று வளைவுச் சந்தியில் மூன்று பக்கங்களும் ஆர்ப்பாட்டகாரர்களால் வீதித் தடை போடப்பட்டு இடைமறிக்கப்பட்டன.

திருகோணமலை - கண்டி பிரதான வீதியில் பஸ் ஒன்றை வீதிக்கு குறுக்கே நிறுத்தி உப்புவெளி பகுதிக்குச் செல்லும் வீதியும் மறிக்கப்பட்டது.

கடைகள் மற்றும் மத்திய மீன் சந்தை மூடப்பட்டு காணப்பட்டது. திருகோணமலை நகரிலுள்ள அரச அலுவலகங்களுக்கு நேற்று காலை, தொழில் நிமிர்த்தம் சென்ற பலரும் திருப்பி அனுப்பப்பட்டதையும் காணக் கூடியதாக இருந்தது. (அ)

# இஸ்ரேல் - பாலஸ்தீனர்கள் தீவிரமடையும் மோதல்கள்



ஜெருசலேம், ஏப்.21

இஸ்ரேல் - பாலஸ்தீனர்களிடையே அண்மைக் காலமாக தீவிரமடைந்து வரும் மோதல்களை அடுத்து பாலஸ்தீனத்தின் காசா நகர் மீது இஸ்ரேல் நேற்று முன்தினம் கடும் விமானத்தாக்குதல்களை நடத்தியது.

இஸ்ரேல் அத்துமீறி தொடர்ச்சியாக பாலஸ்தீன பகுதிகளை ஆக்கிரமித்து வரும் நிலையில் பாலஸ்தீனத்தின் காசா நகரை நிர்வகிக்கும் ஹமாஸ் போராளிகளுக்கும் இஸ்ரேல் இராணுவத்துக்கும் இடையே நீண்ட காலமாக மோதல்கள் நீடித்து வருகின்றன.

இந்நிலையில், அண்மை நாட்களாக இஸ்ரேல் ஆக்கிரமிப்பு ஜெருசலேம் நகரில் இஸ்ரேல் பொலிஸாருக்கும் பாலஸ்தீனர்களுக்கும் இடையிலான மோதல் அதிகரித்தது. குறிப்பாக, ஜெருசலேம் நகரில் உள்ள அல் அக்சா மசூதிக்கு அருகே நடைபெற்ற மோதல்களில் நூற்றுக்கணக்கான பாலஸ்தீனர்கள் காயமடைந்தனர்.

இந்நிலையில், இஸ்ரேல் பொலிஸாரின் இந்த வன்முறையை கண்டித்து ஹமாஸ் போராளிகள் நேற்று முன்தினம் நள்ளிரவு இஸ்ரேலின் தெற்கு நகரம் மீது ரொக்கெட் தாக்குதல் நடத்தினர். எனினும், இஸ்ரேல் வான் பாதுகாப்பு அமைப்பு அந்த ரொக்கெட்டை நடுவானிலேயே இடை மறித்து அழித்து விட்டதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

இதனையடுத்தே ரொக்கெட் தாக்குதலுக்கு பதிலடியாக காசா நகர் மீது வான் தாக்குதல் நடத்தியதாகவும் இஸ்ரேல் இராணுவம் தெரிவித்தது. காசாவில் ஹமாஸ் போராளிகளின் ஆயுத உற்பத்தித் தளத்தை குறிவைத்து இந்தத்தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் இஸ்ரேல் தரப்பில் கூறப்பட்டுள்ளது.

எனினும், இந்த வான் தாக்குதலில் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து தகவல்கள் இல்லை.

யூதர்கள் - முஸ்லிம்கள் ஆகிய இரு பிரிவினரும் தமது புனித தலமாக கருதி வரும் ஜெருசலேம் அல்-அக்ஸா மசூதி வளாகத்தில் இரு தரப்பினருக்கும் இடையே அடிக்கடி மோதல் ஏற்பட்டு வருகிறது.

# 10 வயதுக்குட்பட்ட சிறாரிடையே புது வகையான கல்லீரல் வீக்கம்

## காரணம் கண்டறிய தீவிர முயற்சி

பாரிஸ்,ஏப்.21

**பிரான்ஸ் உட்பட சில நாடுகளில் பத்து வயதுக்குட்பட்ட டசின் கணக்கான சிறுவர்கள் மத்தியில் புதுவகையான கல்லீரல் வீக்க நோய் அவதானிக்கப் பட்டிருக்கிறது.**

**அது வேறும் பல நாடுகளில் காணப்படலாம் என்று உலக சுகாதார நிறுவனம் ஓர் அறிக்கையில் எச்சரித்துள்ளது.**

முதலில் பிரிட்டனிலும் பின்னர் ஸ்பெயின், நெதர்லாந்து, டென்மார்க், அமெரிக்கா போன்ற நாடுகளிலும் பல டசின் சிறுவர்களில் தோன்றியுள்ள எதிர்பாராத இந்தப்புதிய வைரஸ் நோயின் நோயியல் தன்மையை அறிந்து கொள்ள ஆய்வுகள் நடத்தப்பட்டு வருவதாகவும் உலக சுகாதார நிறுவனம் தெரிவித்துள்ளது.



ஹெபடைடிஸ் (hepatitis) எனப்படுகின்ற கல்லீரல் நோய் பொதுவாக வளர்ந்தவர்களில் தோன்றுவது வழக்கம். ஏ முதல் ஈ வரை பெயரிடப்படுகின்ற ஹெபடைடிஸ் வைரஸ் பல்வேறு காரணங்களால் ஒருவருக்குத் தொற்றுகிறது. அதன் பாதிப்புகள் வேறுபடுகின்றன.

ஆனால் குழந்தைகளில் கண்டறியப் பட்டுள்ள புதிய ஹெபடைடிஸ் வைரஸ் இந்த ஏ முதல் ஈ வரையான வைரஸ் கிருமிகளுக்குள் அடங்காத புதிய வகை என்ற தகவல் மருத்துவ வட்டாரங்களில் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸின் லியோன் போதனா மருத்துவமனையில் நோய்த்தன்மை அறியாத கல்லீரல் வீக்கத்தினால் பாதிக்கப்பட்ட இரண்டு சிறுவர்கள் மீது பரிசோதனைகள் நடத்தப்பட்டு வருவதாகப் பொதுச் சுகாதாரப்பிரிவினர் தெரிவித்துள்ளனர். வழக்கமாக வளர்ந்தோரில் ஏற்படுகின்ற ஹெபடைடிஸ் நோயின் பொதுவான அறிகுறிகளாகிய உடல் மஞ்சள் நிறமாக மாறுதல், வயிற்றில் அரிப்பு, கடும்நிறத்தில் சிறுநீர் வெளியேறுதல், உடல் வெப்பம் அதிகரித்தல், வழமைக்கு மாறான களைப்பு, பசியின்மை, வயிற்றுவலி போன்ற அதே அறிகுறிகளே சிறுவர்களிடையேயும் அவதானிக்கப்பட்டுள்ளன.

# பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தல்: மக்ரோன் - லூ பென் கடும் போட்டி!

## வெற்று வாக்குகள் செலுத்தத் தீர்மானம்

பாரிஸ், ஏப்.21

பிரான்சில் எதிர்வரும் 24 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாவது இறுதிச் சுற்று வாக்களிப்பின் போது தீவிர இடதுசாரி ஜோன் லூக் மெலன்சோனின் ஆதரவாளர்கள் பலரும் வாக்களிக்காமல் தவிர்ப்பது அல்லது செல்லுபடியற்ற விதமாக வெற்று வாக்குகளைச் செலுத்துவதற்குத் தீர்மானித்துள்ளனர் எனத் தெரியவருகிறது.



இறுதிச் சுற்றில் தற்போதைய ஜனாதிபதி மக்ரோனுக்கும் கடும் தீவிர வலதுசாரியான மரின் லூ பென்னுக்கும் இடையே மிக நெருக்கமாகப் பலத்த போட்டி நிலவுகின்றது.

அவ்வாறான சூழ்நிலையில் முதற்சுற்றில் மூன்றாவது வெற்றியாளராக வந்த மெலன்சோனின் தரப்பு வாக்குகள் இறுதி வெற்றியைத் தீர்மானிப்பதில் மிகுந்த செல்வாக்குச் செலுத்தப்போகின்றன.

மக்ரோனை நிராகரிக்கின்ற அதேவேளை மரின் லூ பென்அம்மையாரைத் தோற்கடிக்கவேண்டும் என்று மெலன் சோன்அழைப்பு விடுத்திருக்கிறார்.

மக்ரோனுக்கு வாக்களியுங்கள் என்று அவர் தனது ஆதரவாளர்களிடம் பகிரங்கமாகக் கோரவில்லை. மெலன்சோனின் இந்த நிலைப்பாட்டை முன்னாள் பிரதமர் எத்துவா பிலிப் உட்பட அரசியல் பிரமுகர்கள் சிலர் கண்டித்துள்ளனர்.

ஜனாதிபதித்தேர்தலின் முதற் சுற்றில் மக்ரோன் 27.84% வீதம், மரின் லூ பென் 23.15% வீதம் மெலன்சோன் 21.95% வீதம் வாக்குகளைப் பெற்றிருந்தனர்.

முதற் சுற்றில் கணிசமான எண்ணிக்கையான இளம் வாக்காளர்கள் மெலன்சோனுக்கு வாக்களித்திருப்பது வாக்கு மதிப்பீடுகளில் தெரியவந்துள்ளது.

# உக்ரைன் - ரஷ்யா மோதலால் வளரும் நாடுகளில் பாதிப்பு!

## ஐ.நா. பாதுகாப்பு சபையில் இந்தியா கவலை

நியூயோர்க்,ஏப்.21

உக்ரைன் மீதான ரஷ்ய தாக்குதல் தொடங்கி 8-வது வாரம் வந்து விட்ட நிலையில், அங்கு நிலவும் மனிதாபிமான நெருக்கடி குறித்து ஆலோசிக்க ஐ.நா. பாதுகாப்புச்சபைக்கூட்டம் நேற்று முன்தினம் கூடியது.

இக்கூட்டத்தில் உரையாற்றிய ஐ.நா.வுக்கான இந்தியாவின் நிரந்தர துணைப் பிரதிநிதி ரவீந்திரா, இந்தியாவின் நிலைப்பாட்டினை எடுத்துரைத்துப் பேசினார்.

அப்போது அவர், “ரஷ்யா, உக்ரைன் மோதல் விவகாரத்தில் இந்தியா ஆரம்பம் முதலே ஒரே நிலைப்பாட்டில் தான் இருக்கிறது. இரு தரப்பும் அமைதிப் பேச்சுவார்த்தைக்கு திரும்ப வேண்டும். வன்முறையை விடுத்து தூதரக உறவு ரீதியாக தீர்வு காண வேண்டும். அப்பாவி மக்களின் உயிர்கள் ஆபத்தில் இருக்கும் போது பேச்சுவார்த்தை மட்டுமே தீர்வாக இருக்க முடியும்.

இதற்கு முன்னால் ஐ.நா. பாதுகாப்புச்சபை கூடிய போது இருந்த நிலையை விட உக்ரைனில் இப்போது நிலவரம் மோசமாகியுள்ளது. குழந்தைகளும், பெண்களும் பாதிக்கப் பட்டுள்ளனர். அகதிகளாக வெளியேறியவர்களில் பெரும்பாலானோர் பெண்கள், குழந்தைகளே. இந்தியா தன்னால் இயன்ற நிவாரண உதவிகளை உக்ரைனுக்கு செய்து வருகிறது. இனியும் செய்யும்.



இந்தச்சூழலில், உக்ரைன்-ரஷ்யா மோதலின் தாக்கம் உலக நாடுகளை ஆட்கொள்ள ஆரம்பித்திருக்கிறது. உணவுப்பொருள் பற்றாக்குறை, எரிபொருள் விலை ஏற்றம் என வளரும் நாடுகளை இந்தப்போர் பதம் பார்க்கத் தொடங்கியுள்ளது. இவற்றையெல்லாம் கூட்டு முயற்சியின் மூலமே சரி செய்ய முடியும். எனவே இரு தரப்பும் உடனே பேச்சுவார்த்தைக்குத்திரும்ப வேண்டும்.”- என்றார்.

# கோல்ப் போட்டி தொடரில் பங்கேற்கிறார் ஆஷ்லே!



சிட்னி, ஏப். 21

ரென்னிஸ் உலகின் முன்னாள் முதல்நிலை வீராங்கனையான ஆஷ்லே பார்ட்டி கோல்ப் விளையாட்டின் கண்காட்சி போட்டியில் பங்கேற்கவுள்ளார். இதன்மூலம் அவர் மூன்றாவது விளையாட்டில் ஈடுபடவுள்ளார்.

25 வயதான ஆஷ்லே பார்ட்டி கடந்த மாதம் ரென்னிஸிலிருந்து ஓய்வை அறிவித்து அதிர்ச்சியை ஏற்படுத்தியிருந்தார்.

இந்நிலையில், வரும் ஜூன் மாதம் ஐகான்ஸ் கோல்ப் தொடரில் ஆஷ்லே பங்கேற்கவுள்ளார். மேலும், "இந்தத் தொடரில் நான் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

உலகெங்கிலும் அதிகமான பெண்கள் மற்றும் சிறுமிகள் கோல்ப் விளையாட்டில் பங்கேற்பதை ஊக்குவிக்க முடியும் என்று நம்புகிறேன்", என்று அவர் கூறியுள்ளார்.

அவுஸ்திரேலியரான ஆஷ்லே பார்ட்டி விம்பிள்டன் கிராண்ட்ஸ்லம் பட்டத்தைக் கைப் பற்றினார். இது ரென்னிஸ் வாழ்வில் அவரின் மூன்றாவது கிராண்ட்ஸ் லம் தொடராக அமைந்தது.

முன்னதாக ஆஷ்லே, கிரிக்கெட் விளையாட்டிலும் ஈடுபட்டிருந்தார். 2015ஆம் ஆண்டு அவர் பிக்பாஷ் லீக் தொடரில் பங்கேற்றிருந்தார். தொழில்முறை கிரிக்கெட் வீராங்கனையாக அவர் குயின்ஸ்லாந்து, பிரிஸ்பேன் ஹீட் அணிகளுக்காக விளையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பங்களாதேஷ் அணியின் முன்னாள் வீரர் மரணம்!

டாக்கா, ஏப். 21

பங்களாதேஷ் அணியின் முன்னாள் இடது கை சுழல் பந்துவீச்சாளர் முஷாரப் ஹூசைன் 40ஆவது வயதில் காலமானார்.

மூளை புற்றுநோயால் பாதிக்கப்பட்டிருந்த அவர், 2019ஆம் ஆண்டு சிகிச்சையின் பின்னர் குணமடைந்தார். ஆனால், 2020 நவம்பரில் அவர் மூளை புற்று நோயால் தாக்கப்பட்டார்.

கடந்த இரு வாரங்களாக மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த அவர் வீடு திரும்பிய நிலையில் உயிரிழந்தார்.

பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் விளையாடிய இவர் இறுதிப் போட்டியில் விருது வென்ற மூன்று பங்களாதேஷ் வீரர்களில் முதலாமவராவார். முதல் தரப் போட்டிகளில் அதிகம் பங்கேற்ற அவர் 112 போட்டிகளில் 3,305 ஓட்டங்களையும், 392 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார்.



சர்வதேச ஒருநாள் போட்டிகளில் 5இல் பங்கேற்ற அவர் 26 ஓட்டங்களையும் 4 விக்கெட்களையும் கைப்பற்றியுள்ளார். இதேபோன்று, இருபது -20 போட்டிகளில் 56 போட்டிகளில் 60 விக்கெட்களையும், 62 ஓட்டங்களையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 100 போட்டிகளில் ஆடி சதம் அடிக்காத கோலி!

மும்பை, ஏப். 21

2019 நவம்பர் 23 அன்று பங்களாதேஷூக்கு எதிரான டெஸ்டில் கொல்கத்தா ஈடன் கார்டன்ஸில் 136 ஓட்டங்கள் எடுத்தார் கோலி. அது அவருடைய 70 ஆவது சதம்.

அதன்பிறகு சதமடிக்காமல் 100 போட்டிகளில் விளையாடி முடித்துவிட்டார் கோலி. 2019 நவம்பருக்குப் பிறகு 17 டெஸ்ட்கள், 21 ஒருநாள், 25 இருபது -20, 37 ஐ. பி. எல். போட்டிகளில் கோலியால் ஒருமுறைகூட சதமெடுக்க முடியவில்லை.

இந்த வருட ஐ. பி. எல்லில் 7 போட்டிகளில் 119 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார் கோலி. ஐ. பி. எல். போட்டியில் அதிக சதங்கள் எடுத்தவர்களின் பட்டியலில் கோலிக்கு 2ஆம் இடம். 6 சதங்களுடன் கெயில் முதலிடத்திலும் 5 சதங்களுடன் கோலி 2ஆம் இடத்திலும் உள்ளார்கள்.

துடுப்பாட்ட திறனை மேம்படுத்த தலைமைப் பதவிகளை அவர் துறந்தபோதும் அவரால் ஓட்டங்களை சேர்க்க முடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# டு பிளசிஸ், ஹசல்வூட் அபாரம் பெங்களூரிடம் வீழ்ந்தது லக்னோ!



மும்பை, ஏப். 21

டு பிளசிஸின் அதிரடியான ஆட்டத்தாலும், ஹசல்வூட்டின் சிறப்பான பந்துவீச்சாலும் லக்னோ சுப்பர் ஜெயண்ட்ஸ் அணி பெங்களூர் அணியிடம் வீழ்ந்தது.

182 ஓட்டங்கள் என்ற இலக்கை துரத்திய லக்னோ அணிக்கு இந்த முறை ஆரம் பத் துடுப்பாட்டம் கை கொடுக்க தவறியது. மூன்றாவது ஓவரிலேயே குயின்ரன் டி கொக் 3 ஓட்டங்களில் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார்.

5ஆவது ஓவரில் மனிஷ் பண்டே 6 ஓட்டங்கள் எடுத்த கையோடு நடையைக் கட்ட, ஓரளவு அடித்து ஆடிய அணித் தலைவர் கே. எல். ராகுலும் 30 ஓட்டங்களில் ஹர்ஷல் பட்டேலில் மெதுவான பந்தில் வீழ்ந்தார். 13 ஓட்டங்கள் எடுத்த தீபக் ஹூடாவும் ஆட்டமிழக்க 100 ஓட்டங்கள் எடுப்பதற்குள் 4 விக்கெட் இழந்து தடுமாறியது லக்னோ.

எனினும், குர்னல் பாண்ட்யா 42 ஓட்டங்கள் எடுத்து கைகொடுக்க, இறுதிக்கட்டத்தில் 12 பந்துகளில் 34 ஓட்டங்கள் எடுக்க வேண்டியிருந்தது. மார்கஸ் ஸ்ரொய்னிஸ் மற்றும் ஜசன் ஹோல்டர் களத்தில் இருந்தனர். ஹசல்வூட் வீசிய முதல் பந்திலேயே ஸ்ரொய்னிஸ் ஆட்டமிழந்து அதிர்ச்சி கொடுத்தார். ஹசல்வூட்டுக்கு இது நான்காவது விக்கெட் ஆகும்.

இறுதி ஓவரில் 31 ஓட்டங்கள் தேவை நின்ற நிலையில் ஹர்சல் பட்டேல் ஓவரில் அடுத்தடுத்து இரண்டு சிக்ஸர் அடித்தார் ஹோல்டர். எனினும், அடுத்த பந்தே ஆட்டமிழந்து வெளியேற லக்னோ அணி தோல்வியை தழுவியது. இதனால் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் பெங்களூர் அணி வெற்றி பெற்று இந்த தொடரில் ஐந்தாவது வெற்றியை பதிவு செய்தது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற லக்னோ அணி பந்துவீச்சை தெரிவு செய்தது. இதன்படி பெங்களூர் அணிக்கு அனுஜ் ராவத், பப் டு பிளசிஸ் இணை தொடக்கம் கொடுத்தது. பெங்களூர் அணிக்கு இது மோசமான தொடக்கமாகவே அமைந்தது.

அனுஜ் ராவத் 4 ஓட்டங்களில் வெளியேற, அடுத்த வந்த கோலி ஓட்டம் எதையும் எடுக்காமல் பெவிலியன் திரும்பினார். மக்ஸ்வெல்லும் பெரியளவில் நம்பிக்கை கொடுக்காமல் 23 ஓட்டங்களில் நடையைக் கட்டினார். சுயாஷ் பிரபுதேசாய் 10 ஓட்டங்களுடன் வெளியேறினார்.

விக்கெட்களை இழந்து தடுமாறிக் கொண்டிருந்த பெங்களூர் அணிக்கு டு பிளசிஸ் பெரும் பக்கபலமாக திகழ்ந்தார். 61 பந்துகளில் 94 ஓட்டங்களைக் குவித்த வரை ஜசன் ஹோல்டர் வெளியேற்றினார்.

இதனால் நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்களில் 6 விக்கெட்களை இழந்த பெங்களூர் அணி 181 ஓட்டங்களை குவித்தது. தினேஷ் கார்த்திக் 13 ஓட்டங்களுடனும், ஹர்ஷல் பட்டேல் ஓட்டம் எதுவும் எடுக்காமலும் ஆட்டமிழக்காமல் இருந்தனர்.

லக்னோவின் பந்துவீச்சில் ஜசன் ஹோல்டர், துஷ்மன் சமீர ஆகியோர் தலா 2 விக்கெட்களையும், குர்னல் பாண்ட்யா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

# பயிற்றுநர் பொறுப்பை ஏற்க மறுக்கிறார் வாஸ்?

கொழும்பு, ஏப். 21

இலங்கைக் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து பயிற்றுநராக நியமிக்கப் பட்ட முன்னாள் வீரரான சமிந்த வாஸ் அந்தப் பதவியை ஏற்க மறுக்கிறார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.



இலங்கை அணி அடுத்த மாதம் பங்களா தேஷ் சென்று விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்காகத்தான் சமிந்த வாஸ் வேகப்பந்து வீச்சு பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தொடருக்கான பயிற்றுநராக தான் செயல்பட முடியாது என்றும் அப்படி செய்வதால் யாருக்கும் எந்தப் பலனும் இல்லை என சமிந்த வாஸ் குறிப்பிட்டுள்ளாராம்.

மேலும் நிரந்த பயிற்றுநராக நியமிக்கப்பட்டால் ஏற்றுக்கொள்வதாகக் கூறினார் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, இந்தியாவில் நடைபெறும் ஜாம்பவான்களின் கிரிக்கெட் தொடரில் சமிந்த வாஸ் விளையாட விருப்பதால் இந்தப் பதவியை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்றும் இன்னொரு தகவல் தெரிவித்துள்ளது. (ஐ)

# பஸ் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, ஏப். 21

நாட்டில் பஸ் சேவைகள் நேற்று காலை முதல் இடைநிறுத்தப்பட்டன.

நேற்று அதிகாலை சேவைகள் இடம்பெற்றபோதும் காலை 6.30 மணிக்கு வந்த அறிவிப்பையடுத்து சேவைகள் இடைநிறுத்தப்பட்டன.

நேற்று நாடு முழுவதும் கடையடைப்புக்கு 300 தொழிற்சங்கங்கள் அழைப்பு விடுத்தன.

இந்த நிலையிலேயே இ.போ.ச மற்றும் தனியார் பஸ் சேவைகள் பாதிக்கப்பட்டன. (அ)

# சட்டத்துக்கு முரணாக பொலிஸ் எதையுமே மேற்கொள்ளவில்லை

## துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து பொது பாதுகாப்பு அமைச்சர் விளக்கம்

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனை துப்பாக்கிச் சூட்டு சம்பவம் குறித்து விசாரணையை செய்ய விசேட குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றில் நேற்று கருத்து வெளியிட்ட அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, விசாரணையை விரைந்து முடித்து அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படும்.

மேலும் ரம்புக்கனை ஆர்ப்பாட்டத்தில் பொலிஸார் சட்டத்திற்கு முரணான எந்தவொரு நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

இந்த சம்பவத்தில் அரசியல் தொடர்பு உண்டு. பொலிஸார் தமக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களின்படியே செயற்பட்டனர்.

போராட்டக்காரர்களையும் பொதுமக்களையும் பாதுகாப்பதே அரசாங்கத்தின் நோக்கம். போராட்டக்காரர்கள் பொது நடவடிக்கைகளுக்கு இடையூறு ஏற்படுத்தும்போது தலையிடுவது பொலிஸாரின் கடமை-என்றார். (அ)

# ரம்புக்கனை சம்பவ விசாரணை; 20 பேர் கொண்ட குழு நியமனம்!

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனை சம்பவம் தொடர்பில் ஆராய சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் அடங்கிய குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவில் 20 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உள்ளடங்குவதாக, சிரேஷ்ட பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இதேவேளை, ரம்புக்கனை சம்பவம் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவும் மூவர் கொண்ட விசேட குழுவொன்றை நியமித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# கட்சி தலைவர்கள் இன்று கூடிப் பேசுவர்!

கொழும்பு, ஏப். 21

கட்சித் தலைவர்களின் விசேட கூட்டம் இன்று மதியம் ஒரு மணிக்கு பாராளுமன்ற கட்டடத் தொகுதியில் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலக வேண்டும் என்று பல்வேறு தரப்பினரும் கோரிக்கை முன்வைக்கும் பட்சத்தில், இணக்கப்பாட்டுக்கு வரும் வகையில் இன்றைய தினம் கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தை நடத்தத் தீர்மானிக்கப்பட்டது. (ஐ)

# நாடு முழுவதும் இன்றும் 3 மணி நேர மின்வெட்டு!

கொழும்பு, ஏப். 21

நாட்டில் இன்று வியாழக்கிழமையும் 3 மணித்தியாலங்களும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

இதற்காக மின்சார சபை முன்வைத்த கோரிக்கைக்கு பொதுப்பயன்பாட்டு ஆணைக்குழு அனுமதியளித்துள்ளது.

இதன்படி, ஏமுதல் டபிள்யூ வரையான வலயங்களில் முற்பகல் 9 மணி முதல் மாலை 5 மணிவரையான காலப் பகுதியில் சுழற்சி முறையில் 2 மணிநேரம் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளது.

இந்த வலயங்களில், மாலை 5 மணி முதல் இரவு 9 மணி வரையான காலப்பகுதியினுள் ஒரு மணிநேரமும் 20 நிமிடங்களும் மின்சாரம் துண்டிக்கப்படவுள்ளதாக பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ஐ)

# சபாநாயகருடன் சஜித் சபையில் வாக்குவாதம்

கொழும்பு, ஏப். 21

ஜனாதிபதி பதவி விலகத் தயாரென அறிவித்ததாகக் கூறப்படும் விவகாரம் தொடர்பில் பாராளுமன்றில் நேற்று கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

அதன்படி சபாநாயகருக்கும் சஜித்துக்கும் இடையில் இந்த விடயம் குறித்து கடுமையான சொற்போர் இடம்பெற்றது.

அனைத்துக் கட்சித் தலைவர்களும் தன்னை பதவி விலகுமாறு கோரினால் அதற்குத் தயார் என சபாநாயகரிடம் ஜனாதிபதி அறிவித்துள்ளதாக நேற்றைய பாராளுமன்ற அமர்வில் உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில் சபாநாயர், "பதவி விலகத் தயாரென ஜனாதிபதி அறிவித்ததாக தெரிவிக்கப்படும் விடயத்தில் எவ்வித உண்மையும் இல்லை" என அறிவித்தார்.

இதற்கு பதிலளித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

"நீங்கள் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் வைத்து இந்த விடயத்தை தெரிவித்தீர்கள். நீங்கள் கூறிய விடயத்தைத்தான் நான் இங்கு வந்து தெரிவித்தேன். பொய்களையும், திரிபுபடுத்தப்பட்ட விடயங்களையும் சொல்ல வேண்டிய தேவை எனக்கு இல்லை. தொன் கணக்கில் பொய் சொல்லாதீர்கள்" என சபாநாயகரை நோக்கி தெரிவித்தார். (அ)

# ரம்புக்கனை துப்பாக்கிச் சூடு; மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருடன் அமெ. தூதுவர் பேச்சு

கொழும்பு, ஏப். 21

நிராயுதபாணியான எதிர்ப்பாளர்களுக்கு எதிரான வன்முறை குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவர் ரோகினி மாரசிங்கவை நேற்று அமெரிக்க தூதுவர் ஜூலி ஜியோன் சங் சந்தித்து பேச்சு நடத்தியுள்ளார்.

ரம்புக்கனை வன்முறைகள் குறித்து முழுமையான, வெளிப்படையான விசாரணையின் அவசியம் குறித்து இதன்போது இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் தலைவருடன் கலந்துரையாடப்பட்டதாக ஜூலி ஜியோன் சங் தெரிவித்தார்.

அமைதியான போராட்டக்காரர்கள் உட்பட அனைத்து இலங்கையர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான பணியில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு ஈடுபட்டுள்ளதாக ஜூலி ஜியோன் சுங் குறிப்பிட்டார். (அ)

# றம்புக்கனை சம்பவம் சுயாதீன விசாரணை நடத்தப்படவேண்டும்

கொழும்பு, ஏப். 21

றம்புக்கனை சம்பவம் தொடர்பில் சுயாதீன விசாரணை நடத்தப்பட வேண்டும் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

போராட்டங்களில் ஈடுபடுபவர்களின் குறைகளை கவனத்தில் கொண்டு பொலிஸாரும் பாதுகாப்புத் தரப்பினரும் நிதானத்தை கடைப்பிடிப்பதை அரசாங்கம் உறுதிசெய்ய வேண்டும் எனவும் இலங்கை சட்டத் தரணிகள் சங்கம் கோரியுள்ளது. (அ)

# எதிர்ப்பு போராட்டம் கைதானோர் மறியலில்!

கொழும்பு, ஏப். 21

மாத்தறையில் முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின் போது கைதுசெய்யப்பட்ட 8 பேரை விளக்க மறியலில் வைக்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்ட ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸாரால் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

இவர்களை நேற்று மாத்தறை நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தியபோது அவர்களை எதிர்வரும் மே 2ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார் நீதிவான். (ஐ)

# 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுள்ள கேரளக் கஞ்சா மீட்பு!

மன்னார், ஏப். 21

மன்னார் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான நிலையில் இருந்த படகொன்றைக் கடற்படையினர் சோதனையிட்டபோது, அதில் இருந்து 81 கிலோவுக்கும் அதிகமான கேரளக் கஞ்சாவை மீட்டனர்.

இந்த கேரள கஞ்சா, 20 மில்லியன் ரூபாவுக்கும் அதிக பெறுமதியானது என கடற்படை தெரிவித்துள்ளது.

இந்நிலையில், குறித்த கேரள கஞ்சா அடங்கிய படகை பொலிஸாரிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது. (அ)

# முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்ற முடிவை மீளப்பெறக் கோரிக்கை

கொழும்பு, ஏப். 21

பொது இடங்களில் முகக்கவசம் அணிவது கட்டாயமில்லை என்ற அறிவிப்பை மீளப்பெறவேண்டும் என சிறப்பு மருத்துவர்கள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

தனிநபர்களாக பயணம் செய்யும் போது முகக்கவசம் அணிய வேண்டிய அவசியமில்லை என்றாலும், மக்கள் அதிகம் கூடும் இடங்களில் கொரோனா தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக்கூறுகள் இன்னும் முற்றாக நீங்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்துள்ள போதிலும், புதிய கொரோனா திரிபுகள் உலகின் பிற பகுதிகளில் பரவி வருவதால் இலங்கையிலும் பரவும் அபாயம் சிறிய அளவில் இருப்பதாக சிறப்பு மருத்துவர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதே சமயம், இலங்கை இந்த நாள்களில் அதிகரித்து வரும் மக்கள் அணிதிரட்டலை எதிர்கொள்கிறது மற்றும் தேவையான அளவு பல்வேறு மருந்துகள் மற்றும் நோய் கண்டறிதல் கருவிகளை வழங்க இயலாமை காணப்படுகிறது.

கொரோனா தொற்றின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டால் நாட்டில் தற்போது நிலவும் குழப்ப நிலை மேலும் அதிகரிக்கும் என சிறப்பு மருத்துவர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது. (அ)

# கொள்கலன் போக்குவரத்து கட்டணங்களும் அதிகரிப்பு

கொழும்பு, ஏப். 21

கொள்கலன் போக்குவரத்திற்கான கட்டணத்தை அதிகரிக்க இலங்கை கொள்கலன் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய நேற்று புதன் கிழமை முதல் அமுலாகும் வகையில் கொள்கலன் போக்குவரத்து கட்டணம் 65 வீதத்தால் அதிகரிக்கப்படுவதாக அந்தச் சங்கம் அறிவித்துள்ளது.

எரிபொருள் மற்றும் பிற தொடர்புடைய உதிரிப்பாகங்களின் விலை அதிகரிப்பு காரணமாக இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக சங்கம் கூறியுள்ளது.

அதற்கமைய, இறக்குமதி செய்யப்பட்டு கொள்கலன்கள் மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களின் விலைகள் மேலும் அதிகரிக்குமென தெரிவிக்கப்படுகின்றது. (அ)

## வன்முறை,...

ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டமையை தொடர்ந்து நாடு முழுவதும் பதற்ற நிலை மேலும் அதிகரித்திருந்தது. இந்த நிலையில், பொருட்கள் விலையேற்றத்தைக் கண்டித்து நேற்றும் மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

போராட்டக்காரர்கள் வீதிகளில் ரயர்களை எரித்தும், பேரணிகள், கவன வீர்ப்பு போராட்டங்களையும் முன்னெடுத்திருந்தனர். போராட்டங்களால் தென்னிலங்கையின் பெரும்பாலான நகரங்கள் இயல்புவாழ்வை இழந்தன. பல நகரங்களில் வன்முறைகள், ரயர்கள் எரிப்பு சம்பவங்கள் தொடர்ந்தன. எனினும், வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பெரும்பாலான பகுதிகளில் இயல்பு வாழ்வு பாதிக்கவில்லை. வவுனியா, திருகோணமலை மாவட்டங்கள் தவிர ஏனைய மாவட்டங்களில் அமைதி நிலவியிருந்தது.

இதேசமயம், 300 தொழில்சங்கங்களின் ஒன்றிணைந்த அமைப்பு நேற்றைய தினம் ஹர்த்தாலுக்கு அழைப்பு விடுத்திருந்தது.

இதேசமயம், நேற்று முன்தினம் கலவரம் வெடித்திருந்த ரம்புக்கனை பிரதேசத்தில் ஊரடங்கு சட்டம் நேற்றும் தொடர்ந்தது. அந்தப் பகுதியில் பொலிஸாரும் இராணுவத்தினரும் பெருமளவில் குவிக்கப்பட்டிருந்தனர். மறு அறிவித்தல் வரை இந்தப் பகுதியில் ஊரடங்கு உத்தரவு தொடரும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, வடக்கில் வவுனியாவிலும், கிழக்கில் திருகோணமலையிலும் வீதிகளை மறித்தும் ரயர்களை எரித்தும் போராட்டங்களில் ஈடுபட்டனர். தவிர, இந்த மாகாணங்களின் ஏனைய மாவட்டங்களில் அமைதி நிலவியிருந்தது. இதே சமயம் ஹர்த்தால் போராட்டத்துக்கு ஆதரவாக இந்த மாகாணங்களில் சில பகுதிகளே முடங்கின. இதேசமயம், நாடு முழுவதும் தொடரும் போராட்டங்களுக்கு ஆதரவு தெரிவிக்கும் விதமாக நேற்றைய தினம் மட்டக்களப்பு மாநகரின் காந்தி பூங்காவில் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

நாட்டில் நிலவும் வன்முறைகள் மற்றும் பதற்ற நிலைமைகள் குறித்து நேற்று அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் இடையே பாராளுமன்றத்தில் கடுமையான வாதப் பிரதிவாதங்கள் இடம்பெற்றன. (ஐ)

## காலிமுகத்திடலில்...

திரிபேஹ சிறிதம்ம தேரர் என்ற பௌத்த மதகுருவே உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்தார்.

காலிமுகத்திடலில் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக 12 ஆவது நாளாக அரசை எதிர்த்து போராட்டம் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையிலேயே நேற்று பிக்குவின் உண்ணாவிரதப் போராட்டம் ஆரம்பமானது. (அ)

## மக்கள்...

வரத்தின்போது உயிரிழந்தவர் வன்முறையில் ஈடுபடும் - எரிபொருள் பவுசருக்கு தீ வைக்கும் நபர் அல்லர்.

ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் இளைஞர் அணி உறுப்பினரான அவர், கடந்த காலங்களில் பல அமைதியான ஆர்ப்பாட்டங்களில் பங்கேற்றுள்ளார் எனவும் ரணில் சுட்டிக்காட்டினார்.

வீதியை மறித்தமைக்காக போராட்டக்காரர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்த பொலிஸார் அவசரப்படுவது ஏன் என ரணில் கேள்வி எழுப்பினார்.

எனவே ஒருவர் மீது ஒருவர் குற்றச்சாட்டுக்களை சுமத்தி நேரத்தை வீணடிக்காமல் முழு பாராளுமன்றமும் ஒன்றிணைந்து தற்போதைய நெருக்கடிக்கு தீர்வு காண்பதற்கான வேலைத்திட்டத்தை வழங்க வேண்டும் எனவும் முன்னாள் பிரதமர் தெரிவித்தார். (அ)

## சிரித்துக்கொண்டு...

யால் வாடி வருகின்றனர். ஆனால் இந்த அரசுக்கு அதைப்பற்றி கவலையில்லை. வீதியில் போராட்டத்திற்கு வரும்போது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்கிறார்கள்.

பட்டினியால் ஏற்பட்டுள்ள வேதனையே இன்று இவ்வாறு போராட்டமாக வெடித்துள்ளது. மக்களின் போராட்டம் சாதாரணமானது, அவர்களது கோபமும் நியாயமானது. நாளை பிரச்னை தீருமா, அல்லது நாளை மறுதினம் தீருமா என்று மக்கள் தினமும் சிந்தித்து வருகின்றனர்.

தயவு செய்து மக்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதை உடனடியாக நிறுத்துங்கள். துப்பாக்கி ஊடாக எந்தவொரு பிரச்னைக்கும் தீர்வு காண முடியாது- என்றார். (அ)

## நெருக்கடியை...

இலங்கையின் பொருளாதார நெருக்கடிகளை சீனா அவதானித்துள்ளது. இந்நிலையில், இலங்கைக்கு உதவ சீனா தயாராக இருப்பதாக அந்த நாட்டின் சர்வதேச அபிவிருத்தி ஒத்துழைப்பு துறையின் பேச்சாளர் சூ வெய் நேற்று நேற்று முன்தினம் தெரிவித்தார்.

இலங்கை அரசாங்கமும் மக்களும் முகங்கொடுக்கும் சிரமங்களை சமாளித்து பொருளாதார மற்றும் சமூக ஸ்திரத்தன்மை மற்றும் அபிவிருத்தியை பேணுவார்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்று வெய் கூறினார்.

சர்வதேச நாணய நிதியத்துடனும், இந்தியாவுடனும் அரசாங்கம் பேச்சுக்களை நடத்தி வரும் நிலையில் சீனாவின் இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## எரிபொருள்...

எரிபொருள் விலையேற்றத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்தும் கோட்டாபய ராஜபக்ஷ அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தியும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்களால் எரிபொருள் பவுஸர்கள் முற்றுகையிடப்படும் ஆபத்து இருப்பதை சுட்டிக்காட்டியே இவ்வாறு விமானப்படையினர் மற்றும் இராணுவத்தின் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

## எரிபொருள் பவுசரை...

பொருள் விலையேற்றத்தை கண்டித்து நேற்று முன்தினம் அதிகாலை முதல் போராட்டங்கள் ஆரம்பமாகின. ரயில் மறிப்பு, வீதி மறியல் என்று தொடர்ந்த போராட்டத்தில் சிலர் கலவரத்தில் ஈடுபட்டனர்.

அவர்கள் வாகனங்கள், மற்றும் சொத்துக்கள் மீது கற்களை வீசித் தாக்கினர். அத்துடன், காணி ஒன்றில் நிறுத்தப்பட்ட ஓட்டோ ஒன்றையும் கலவரக்காரர்கள் தீயிட்டிருந்தனர்.

இதைத் தொடர்ந்து போராட்டக்காரர்களை கலைக்க பொலிஸார் கண்ணீர் புகைக்குண்டுகளை பிரயோகித்தனர். இதையடுத்து, கலவரக்காரர்கள் கற்களை வீசித் தாக்குதல்களை நடத்தினர்.

இதன்போது பெற்றோல் நிலையம் ஒன்றுக்கும் தீயிடப்பட்டது. ஆனால், அந்தத் தீ உடனடியாக அணைக்கப்பட்டது.

இந்நிலையில், வீதியில் ஆர்ப்பாட்டக்காரர்களால் மறிக்கப்பட்ட எரிபொருள் பவுசரை நோக்கி சென்ற சிலர் அதற்கு தீ வைக்க முயல்கிறார்கள். அந்த பவுசரில் 33,000 லீற்றர் எரிபொருள் இருந்ததாகக் கூறப்படுகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு பொலிஸ் மா அதிபர் சி. டி. விக்ரமரத்ன விடுத்த அறிக்கையில், “எரிபொருள் நிறைந்த பவுசருக்கு தீ வைக்கும் முயற்சியை தடுக்கவே துப்பாக்கி சூடு நடத்தப்பட்டது. அத்துடன், குறைந்த பட்ச பலமே பிரயோகிக்கப்பட்டது, என்றும் கூறியிருந்தார். (ஐ)

## நெருக்கடி...

பாராளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனுக்கும் இடையிலான சந்திப்பிலேயே மேற்படி விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

பிரதமரின் அழைப்பின்பேரில் நடந்த இந்த சந்திப்பு சுமார் 30 நிமிடங்கள் நீடித்தது. இதில் பிரதமரின் வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்பாளரும், யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக்குழுவின் பிரதமரின் பிரதிநிதியுமான கீதநாத் காசிலிங்கமும் பங்கேற்றிருந்தார்.

இந்த சந்திப்பில், “20ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் காணப்படும் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை நீக்கி மீண்டும் 19ஆவது திருத்தச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள அதிகாரங்களை நடைமுறைப்படுத்துவதற்கான அமைச்சரவை அனுமதிக்கான முன்மொழிவை எதிர்வரும் திங்கட்கிழமை நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் முன்மொழியவுள்ளேன்.

21ஆவது திருத்தச்சட்டமாக வரவுள்ள இந்த முன்மொழிவுடன் மேலதிகமாக இணைக்கப்பட வேண்டிய சட்ட திருத்தங்கள் வேறு ஏதும் விசேடமானதாக உள்ளனவா?” என்று பிரதமர் மஹிந்த சுமந்திரனிடம் கேட்டார்.

இதற்குப் பதிலளித்த சுமந்திரன் “நீங்கள் குறிப்பிடுவது வரவேற்கத்தக்க விடயமாக இருந்தாலும், ஒட்டுமொத்த மக்களின் எதிர்பார்ப்பு இந்த நாட்டில் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழித்தலாகும். ஆகவே, அதனை மையப்படுத்தி நடவடிக்கை எடுத்தீர்கள் என்றால் சிறந்ததாக இருக்கும்” என்றார்.

பின்னர், “நீங்கள் குறிப்பிடுவது போன்று நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாக இருந்தால் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம். பாராளுமன்றில் மூன்றிலிரண்டு பெரும்பான்மை அவசியம். தற்போதைய நிலையில் அவை சாத்தியமில்லையல்லவா?” என்று பிரதமர் மஹிந்த கூறினார்.

அந்தச் சமயத்தில், “இல்லை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை முற்றாக ஒழிப்பதற்கு இதுவே பொருத்தமான தருணம். இந்தச் சந்தர்ப்பத்தில் அதனை செயல்படுத்த முடியும். பொது மக்கள் நிறைவேற்று அதிகார ஜனாதிபதியை முழுமையாக எதிர்க்கும் மனநிலையில் உள்ளனர். போராட்டங்களை நடத்துகின்றனர். அவ்விதமான நிலையில் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டால் மக்கள் எதிர்க்கமாட்டார்கள். அதற்கான ஆணையை வழங்குவார்கள்.

அதேநேரம், எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியானது நாளை (இன்று) காலையில் அந்தக் கட்சியின் செயலாளரான ரஞ்சித் மத்தும பண்டாரவின் பெயரில் தனிநபர் பிரேரணையொன்றை சபாநாயகரிடத்தில் கையளிக்கவுள்ளது. அந்தப் பிரேரணையானது, நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை ஒழிப்பதாகும். ஆகவே, ஆளும் தரப்பாகவே அம்முறையை நீக்குவதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கின்றபோது எதிர்க்கட்சியினரும் எதிர்க்கமாட்டார்கள்” என்று பதிலளித்தார் சுமந்திரன்.

எனினும், பிரதமர் மஹிந்த, “அதற்கான சாத்தியப்பாடுகள் எவ்வளவு தூரம் காணப்படுகின்றது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது. ஆனால், தற்போதைய நிலையில் நிறைவேற்று அதிகார முறைமையை அதியுச்சமான அளவில் குறைப்பதற்கு நடவடிக்கைகளை எடுக்கவுள்ளேன்” என்று கூறினார்.

தொடர்ந்து சமகாலத்தில் நாடாளவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் தொடர்பில் இருவரும் கவனம் பேசினர். இதன்போது, இந்தப் போராட்டங்களை நிறுத்தி சுமுகமான நிலையை ஏற்படுத்துவதற்கான வழிகள் பற்றி பிரதமர் மஹிந்த சுமந்திரனிடத்தில் பரஸ்பர ஆலோசனை செய்துள்ளார்.

இதன்போது, “ஜனாதிபதி கோட்டாபயவை பதவியிலிருந்து விலகி வீட்டுக்குச் செல்லுமாறே இளையோரும் அனைத்து மக்களும் வலியுறுத்துகின்றனர். தொடர்ச்சியாக போராடுகின்றனர். ஆகவே, போராட்டங்களை முடிவுக்கு கொண்டு வருவதாக இருந்தால் அவர் (கோட்டாபய) பதவியிலிருந்து விலகுவதைத் தவிர வேறு எந்தத் தெரிவும் தற்போதைக்கு இல்லை” என்று சுமந்திரன் பிரதமரிடம் கூறினார்.

இந்த சமயத்தில், “மக்கள் ஆணை பெற்ற ஜனாதிபதி இவ்வாறான போராட்டங்களுக்காக பதவி விலகுவது பொருத்தமற்றது. அவ்விதமான நிகழ்வுகள் எங்கும் நடைபெறவில்லை” என்று பிரதமர் மஹிந்த தெரிவித்துள்ளார்.

இதன்போது குறுக்கிட்ட சுமந்திரன், “நாட்டின் தற்போதைய பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடிகளுக்கு யார் காரணம், நீங்களா?” என்று கேள்வி எழுப்பினார்.

“நான் இல்லை. ஜனாதிபதியே காரணம்” என்று பதிலளித்தார் மஹிந்த.

“அப்படியென்றால் ஜனாதிபதி பதவி விலகித்தானே ஆகவேண்டும். மேலும் இரசாயன உர இறக்குமதி மற்றும், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லுதல் ஆகிய இரு விடயங்களில் தான் தவறிழைத்துள்ளதாக ஜனாதிபதியே ஏற்றுக்கொண்டுள்ளார். ஆகவே தவறு செய்தவர் அதற்கான பொறுப்பை ஏற்பதுதானே பொறுப்புக்கூறலாகும்” என்று சுமந்திரன் தெரிவித்தார். இதைத் தொடர்ந்து இருவரும் இந்த விடயம் குறித்து பேசவில்லை.

பின்னர், “நீங்கள்தான் எதிர்க்கட்சிக்கும் ஆலோசனை வழங்கியுள்ளீர்கள். அவர்களின் தனிநபர் பிரேரணை உங்களின் ஆலோசனையில்தான் வரையப்பட்டுள்ளது” என்று பிரதமர் மஹிந்த சுமந்திரனைப் பார்த்துக் கேட்கவும், “ஆம் நான் ஒரே விடயத்தைத்தான் கூறுகின்றேன். கட்சிகளின் அடிப்படையில் எனது கருத்துக்களும், நிலைப்பாடுகளும் மாறுவதில்லை” என்று பதிலளித்திருந்தார். (ஐ)

## வடக்கின்...

தினங்கள் நடைபெறும் இந்தப் போட்டியில் பார்வையாளர்கள் பங்கேற்க அனுமதி மறுக்கப்பட்டுள்ளது என்று யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அதிபர் எஸ். கே. எழில்வேந்தன் தெரிவித்துள்ளார்.

நாட்டின் தற்போதைய நிலைமையை கருத்தில் கொண்டு பொலிஸாருடனான கலந்துரையாடலை தொடர்ந்தே பார்வையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இரு பாடசாலைகளுக்கும் இடையிலான இந்தத் துடுப்பாட்ட போட்டி 118 வருடங்கள் பழமையானது. அத்துடன், வடக்கின் துடுப்பாட்ட வரலாற்றில் முதல் போட்டித் தொடரும் இதுவாகும். 115 ஆவது ஆண்டாக இந்த வருடம் நடக்கும் போட்டியில், இதுவரை சென். ஜோன்ஸ் கல்லூரி 37 போட்டிகளிலும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 28 போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளன. 41 போட்டிகள் சமநிலையில் முடிவடைந்துள்ளன. 7 போட்டிகளுக்கு முடிவு காணப்படவில்லை. ஒரு போட்டி மழையால் கைவிடப்பட்டுள்ளது.

இரு அணிகளும் சமபலம் பொருந்தியவையாக இருப்பதால் இன்று ஆரம்பிக்கும் இந்தப் போட்டியில் பரபரப்புக்கு பஞ்சம் இருக்காது என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

இன்றைய தினம் ஆரம்பமாகும் வடக்கின் பெருந்துடுப்பாட்ட போட்டி முழுமையாக டான் செய்தி தொலைக்காட்சி அலைவரிசையில் நேரலையாக ஒளிபரப்பாகும். (ஐ)

## மேலும்...

ளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் நேற்று சபையில் அறிவித்தார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசல் காசிம், எஸ்.எம். தௌபீக் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பாராளுமன்ற உறுப்பினர் இஷாக் ரஹ்மான் ஆகியோர் இதுவரை காலம் அரசாங்கத்துக்கு ஆதரவளித்து செயற்பட்டு வந்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## ரம்புக்கனை...

வெளிப்படையான விசாரணைகளை பொலிஸார் மேற்கொள்வார்கள் எனவும், இந்த துயரச் சம்பவம் தொடர்பில் தான் கவலையடைவதாகவும் ஜனாதிபதி மேலும் கூறினார். (அ)

ஈழநாடு
Eelanadu

# இலங்கைக்கு உதவி வழங்குவதற்கு தயார்

## உலக வங்கி அறிவிப்பு

வொஷிங்டன், ஏப். 21

இலங்கைக்கு அவசர உதவிகளை வழங்கத் தயாராக இருப்பதாக உலக வங்கி தெரிவித்துள்ளது.

வொஷிங்டனில் நிதியமைச்சர் அலி சப்ரியுடன் நடத்திய பேச்சு வார்த்தையைத் தொடர்ந்து உலக வங்கியின் துணைத் தலைவர் ஹாட்விக் ஷாபர் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயம் குறித்து தனது ருவிட்டர் பக்கத்தில் பதிவிட்டுள்ள அவர், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதற்கும் ஸ்திரத்தன்மை மற்றும் மீட்சியை ஆதரிப்பதற்கும் பாதிக்கப்படக்கூடிய மக்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கைகள் குறித்து இதன்போது விவாதித்ததாக கூறினார்.



ஏழைகள் மற்றும் பாதிக்கப்படக்கூடியவர்கள் மீதான நெருக்கடியின் தாக்கம் குறித்து உலக வங்கி ஆழ்ந்த கவலை கொண்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

எனவே, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் சுகாதாரம் தொடர்பான பொருட்கள், ஊட்டச்சத்து மற்றும் கல்விக்கு அவசர உதவியை வழங்க தயாராக உள்ளது என்று ஹாட்விக் ஷாபர் கூறினார். (அ)

# ரம்புக்கனை மோதலில் ஏற்பட்ட உயிரிழப்பு ஒரு படுகொலையே

## கபீர் ஹாசிம் எம்.பி. சாடல்

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனை மோதல் சம்பவம் தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவினூடாக விசாரணைகளை நடத்தக் குழுவொன்று நியமிக்கப்படவேண்டுமென ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசிம் தெரிவித்தார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான 42 வயதான கே.டி.லக்ஷான் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவித்த அவர், றம்புக்கனை மோதலில் ஏற்பட்ட உயிரிழப்பு ஒரு படுகொலையே எனவும் குறிப்பிட்டார்.

ரம்புக்கனை மோதலில் உயிரிழந்த நபர் தொடர்பாக நேற்று புதன்கிழமை பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கேகாலையில் இன்று ஒரு சோகமான நிலை ஏற்பட்டுள்ளது. எண்ணெய் விநியோகம் முறையாக



வழங்கப்படுவதாக எண்ணெய் அமைச்சர் கூறினார். நான்கு நாட்களாக அந்த கூட்டுறவு கொட்டகையில் எரிபொருள் இல்லை.

இந்த போராட்டம் மிகவும் அமைதியான போராட்டம். எண்ணெய் பவுசரை நிறுத்தி பழைய விலைக்கே எரிபொருளை கேட்டார்களே தவிர யாரும் ஆயுதம் ஏந்தி போராட்டம் நடத்தவில்லை. நிராயுதபாணியான போராட்டம். ஓட்டோக்கு பொலிஸார் தீ வைத்து எரிக்கும் காணொளி ஒன்று வெளியாகியுள்ளது. பொலிஸாரை வழிநடத்துவது யார்?

கே.டி.லக்ஷான் 42 வயது மதிக்கத்தக்கவர். இவரது மனைவி பிரியங்கனி. அவருக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். 18 வயதில் ஒரு மகள் இருக்கிறாள். 15 வயதில் ஒரு மகன் இருக்கிறான். இன்று அவர்கள் ஆதரவற்ற நிலையில் உள்ளனர். அந்த மனிதன் ஏன் அங்கு சென்றான்? அவருக்கு ஒரு லாரி டெக் உள்ளது. பின்னவல யானைகள் சரணாலயத்தில் உள்ள யானைகளுக்கு உணவளிக்க இது பயன்படுத்தப்படுகிறது. 4 நாட்களாக லாரியில் டீசல் இல்லை. அந்த மனிதன் வாழ வழியில்லாது பிழைப்பு நடத்த அங்கு சென்றான். இறுதியாக ஒரு புல்லட் சாப்பிட்டார். அது நியாயமா? உங்களுக்கு கவலை இல்லையா? வாழ்வது அமைதியின்மையை ஏற்படுத்துவதற்காக அல்ல. குடும்பத்தை வாழவைக்க சென்றவர் சுட்டுக்கொல்லப்பட்டார். இது ஒரு கொலை. இந்தக் கொலைக்குக் காரணமானவர்கள் பலர்-என்றார். (அ)

# 12 தொழில்சங்கங்கள் இணைந்து கொழும்பில் நேற்று போராட்டம்!

கொழும்பு, ஏப். 21

இலங்கை ஆசிரியர் சங்கம் உட்பட 12 தொழில்சங்கங்கள் நேற்று கொழும்பில் பேரணி ஒன்றை நடத்தின. மே தினத்தை ஒட்டிய பேரணியாக இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பாலதம்புவிலிருந்து காலிமுகத்திடல் ஆர்ப்பட்ட இடம் வரை கோவிட் 19 கட்டுப்பாடுகளை பின்பற்றியும், சமூக இடைவெளியை பேணியும் இந்தப் பேரணி நடத்தப்பட்டது.

இந்தப் போராட்டத்தில், கோவிட் தொற்றை காரணம் காட்டி பேரணிக்கு தடைவிதிக்க முயன்ற பொலிஸார் அவர்களை கைது செய்யப்போவதாகவும் அச்சுறுத்தினர். இதனால், இரு தரப்பினருக்கும் இடையே கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது. எனினும், பின்னர் பேரணி கோவிட் 19 விதிகளை பேணி அமைதியாக நடை பெற்றது.

பேரணியில் பங்கேற்றவர்கள், “அதிபர், ஆசிரியர்களுக்கு சம்பள உயர்வு வழங்கு!, ஆசிரியர், மாணவர்களுக்கும் தரமான கோவிட் தடுப்பூசி வழங்கு!, கல்விக்கு 6 வீதத்தை ஒதுக்கு உள்ளிட்ட கோஷங்களை வலியுறுத்தினர். (ஐ)



# மட்டக்களப்பைச் சேர்ந்த மூவர் தனுஷ்கோடி சென்றடைந்தனர்!

கொழும்பு, ஏப். 21

இலங்கையில் ஏற்பட் டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக மட்டக்களப்பில் ஒரு குடும்பத்தை சேர்ந்த 3 பேர் நேற்று அதிகாலை தனுஷ்கோடிக்கு அகதி களாக சென்றுள்ளனர்.

தனுஷ்கோடி சென்ற டைந்த இவர்களை மீட்ட மரைன் பொலிஸார் தனுஷ்கோடி மரைன் காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தி வருகின்றனர்.

அவர்கள் மட்டக்களப்பில் இருந்து எவ்வாறு தனுஷ்கோடிக்கு சென்றார்கள் என்பது குறித்து பொலிஸார் விசாரணை களை மேற்கொண்டுள்ளனர். (அ)



# கோட்டை ரயில் நிலையம் முன் தொழிற்சங்கங்கள் போராட்டம்!

## ரம்புக்கனை படுகொலையை கண்டித்து

கொழும்பு, ஏப். 21

ரம்புக்கனையில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருக்கும்போது நேற்று பொலிஸாரால் சமிந்த லக்ஷான் சுட்டுக் கொல்லப்பட்டதைக் கண்டித்து கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் தொழிற்சங்கங்கள் மற்றும் சிவில் அமைப்புகள் இணைந்து நேற்று பெரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கெதிராக நாடளாவிய ரீதியில் நேற்று கறுப்பு ஆர்ப்பாட்ட நாள் தொழிற்சங்கங்களால் கடைப்பிடிக்கப்பட்டது.

இந்நிலையில் கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆசிரியர்கள், வங்கி ஊழியர்கள், துறைமுக, ரயில் நிலைய மற்றும் தபால் ஊழியர்களின் தொழிற்சங்கங்களும் பங்கேற்றன. (அ)







இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 21.04.2022 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : சமயம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து வழங்குபவர் உளவள துனையாளர் திரு.நா.நவராஜ்
7.15 மணி : கதைவழி அறமொழி-ஜோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர்
7.20 மணி : சித்த மருத்துவம் வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர் நாடகம்
11.00 மணி : பாரதீ - மறுஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : நலம்தானா-மறுஒளிபரப்பு
1.30 மணி : சுப்பர் சீன்ஸ் - இஞ்சி இடுப்பழகி, நண்பேன்டா திரைப்படங்களிலிருந்து காட்சிகள்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-சிறுவர்களுக்கான நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : வெள்ளித்திரை- எதற்கும் துணிந்தவன்



**இரவு**
7.00 மணி : சமையல் சமையல்



7.30 மணி : வெள்ளிடை நுட்பம்-தொழில்நுட்பம் பயன்பாடுபற்றிய நிகழ்ச்சி
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : கச்சேரி ஆரம்பம்
10.00 மணி : நேருக்கு நேர்-அரசியல் நிகழ்ச்சி

**DAN COMEDY HD**

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**DAN MUSIC HD**

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஒய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**கல்வி tv CHANNEL-1**

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**சிவன் ஒளி**

**காலை**
5.00மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
7.00 மணி : இன்றைய சிந்தனை
7.05 மணி : இன்றைய நாள்
7.20 மணி : ஈழத்து சித்தர்கள்
7.30 மணி : மங்கள இசை
8.00 மணி : அருளுரை
8.30 மணி : திருவாசகம்
9.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பஜனை
10.30 மணி : தமிழகோவில் திருவிழா
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : திருவிழா-01

**CHANNEL HOLY MARY**

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்கேளும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

**Pirai Television**

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு